
விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து




சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 16 வியாழக்கிழமை (29.05.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 162

# ‘சக்தி’ செய்தியாளர் தேவகுமாரும் அவரது நண்பரும் வெட்டிக் கொலை

## கல்லுண்டாய் வெளியில் கோரம்

(யாழ்ப்பாணம்)

‘சக்தி’ தொலைக்காட்சி மற்றும் ‘சக்தி’ எவ். எம்.இன் யாழ்ப்பாணச் செய்தியாளர் தேவாவும் அவரது நண்பரும் கல்லுண்டாய்வெளியில் வைத்து நேற்று மாலை 5 மணியளவில் இனந்தெரியாதோரால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் தமது பணியை முடித்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பரநிருபசிங்கம் தேவகுமார் (வயது-32), யாழ்.தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் பணியாற்றும் மூளாய் வீதி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த மகேந்திரன் வரதன் (வயது-28) ஆகிய இருவருமே கொல்லப்பட்டவர்கள் ஆவர்.

வெட்டுக் காயங்களுக்கு இலக்கான சக்தி செய்தியாளர் தேவகுமார் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும் வரதன் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்ததாகவும் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

தேவகுமாரின் அடையாள அட்டை சம்பவ இடத்தில் காணப்படவில்லை என்வும் அவரது மோட்டார் சைக்கிள் (10 ஆம் பக்கம் பார்க்க)

# போரின் வெற்றியை தக்க வைக்க அரசியல் வெற்றியை பெற வேண்டும்

## அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு

(கொழும்பு)

போரின் வெற்றிகளைத் தக்கவைக்க வேண்டுமானால் அரசியல் ரீதியான வெற்றிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அந்த வெற்றிகளை இன்று நாம் பெற்று வருகின்றோம் என அன்மச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## என்னை அரசாங்கம் கைது செய்தால் பாரிய பின்விளைவுகள் ஏற்படும்

### சோமவன்ச அமரசிங்க எச்சரிக்கை

(கொழும்பு)

அரசாங்கம் தன்னைக் கைது செய்தால் அதற்கு அஞ்சப் போவதில்லை என்றும் அதனால் அரசாங்கம் பாரிய பின் விளைவுகளை எதிர்நோக்க நேரிடும் எனவும் ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தமக்குத் தேவையான வகையில் விமல் தரப்பை ஜனாதிபதி வழிநடத்துவதாக அவர் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் நடைபெற்ற ஜே.வி.பியின் ஐந்தாவது தேசிய மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியி (10 ஆம் பக்கம் பார்க்க)

## மானிப்பாயில் வைத்து இளம் பெண் கடத்தல்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் கட்டுடைப் பகுதியில் வைத்து இளம் பெண் ஒருவர் ஆயுததாரிகளால் கடத்தப்பட்டுள்ளதாக யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

மானிப்பாய் மேற்கு கட்டுடைப் பகுதியைச் சேர்ந்த சிறிகாந்தன் பிறேமலோஜினி (வயது-23) என்ற பெண்ணே கடத்தப்பட்டுள்ளார். மேற்படி பெண்ணின் வீட்டிற்கு கடந்த 23 ஆம் திகதி முற்பகல் (10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களான சிறுவனும் இளைஞனும் கொழும்பில் கடத்தல்

(கொழும்பு)

கொழும்பில் வைத்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிறுவன் ஒருவனும் இளைஞர் ஒருவரும் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பு கொட்டாஞ்சேனையில் வைத்துச் சிறுவன் ஒருவன் நேற்று நண்பகல் கடத்தப்பட்டுள்ளதாகக் கொட்டாஞ்சேனைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல் பாடசாலை முடிந்து வீடு திரும்பும் வழியில் இந்தச் சிறுவனை ஆட்டோவில் வந்தவர்கள் கடத்திச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொட்டாஞ்சேனை விவேகானந்தாக் கல்லூரியில் தரம் இரண்டில் கல்வி பயிலும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ரவீந்திரகுமார் சுபசிரவின் (வயது-07) (10 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டர் ஆசிரியர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலயத்தில் நாடகமும் அரங்கியலும் பாடத்தைக் கற்பிக்கும் தொண்டர் ஆசிரியர் ஒருவர் ஆயுததாரிகளால் யாழ். புகையிரத நிலையத்திற்கு அண்மையில் வைத்து நேற்றுக் காலை 11.30 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சுட்டுக்கொல்லப்பட்டவர் உடுவில் வடக்கு சுன்னாகத்தைச் சேர்ந்த சின்னத்துரை வேல் சுதாகரன் (10 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை மீறல்கள் குறித்து ஆராய ஐரோப்பிய ஒன்றியக் குழு இல. வருகை

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து ஆராய்வதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் மனித உரிமைக் குழுவிற்கான தூதுவர்கள் இலங்கை வரவுள்ளனர்.

இலங்கையுடன் மேற்கொண்டுள்ள ஜீ.பி. எஸ் பிளஸ் எனப்படும் வர்த்தக உடன்பாட்டின் நீடிப்புக்கு முன்னர் அங்குள்ள மனித உரிமைகள் தொடர்பான ஆய்வை மேற்கொள்ளும் பொருட்டு ஐரோப்பிய ஒன்றியத்தின் மனித உரிமைகள் குழுவிற்கான தூதுவர்கள எதிர்வரும் ஜூன் மாதம் இலங்கை வரவுள்ளனர்.

சர்வதேச தராதரத்திற்கு அமைவாக இலங்கையில் மனித உரிமைகள் பேணப்படுகின்றதா ? அதற்கான அரசின் நடவடிக்கைகள் என்ன (10 ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய அடையாள அட்டை தொலைந்தால் மீளப் பெற மூவாயிரம் ரூபாய் அபராதம்

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டைகள் காணாமல் போன சந்தர்ப்பத்தில் மீண்டும் அதைப் பெற்றுக் கொள்ள விண்ணப்பிப்போரிடம் மூவாயிரம் ரூபாய் அபராதம் அறவிடப்படவுள்ளது. இதற்கென ஆட்பதிவுச் சட்டமூலத்தில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனப் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புச் சட்டவிதிகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் இந்தச் சட்டம் அமுல்படுத்தப்பட உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேசிய அடையாள அட்டையைப் பிணையாக வைக்க வேண்டாம் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் (10 ஆம் பக்கம் பார்க்க)

# அரையிறுதியில் சென்னை சுப்பர் கிங்ஸ்

## 12-வது தோல்வியுடன் விடைபெற்றது கில்கிறிஸ்ட் அணி


சுரேஷ் ரெய்னா

(ஐதராபாத்)

சுரேஷ் ரெய்னா, தோனியின் சிறப்பான துடுப்பாட்டத்தினால் சென்னை சுப்பர் கிங்ஸ் 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.

இந்தியன் பிரிமியர் லீக் தொடரில் நேற்று முன்தினம் இரவு ஐதராபாத்தில் நடைபெற்ற பரபரப்பான லீக் சுற்றின் 54-வது ஆட்டத்தில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் கில்கிறிஸ்ட் தலைமையிலான டெக்கான்சார்ஜர்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் வெற்றி பெற்றால் மாத்திரமே அரையிறுதிக்குள் நுழைய முடியும் என்ற இக்கட்டான நிலையில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி களமிறங்கியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 147 ஓட்டங்களை எடுத்தது.

இதில் வேணுகோபால் ராவ் 46 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 46 ஓட்டங்களையும் ரவிதியா 28 பந்துகளில் (4 பவுண்டரிகள்,ஒரு சிக்ஸர் உட்பட) 40 ஓட்டங்களையும் மற்றும் ஸ்கொட் ஸ்ரைரிஸ் 20 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மோர்கல்,பாலாஜி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 148 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ரெய்னா, தோனியின் சிறப்பான ஆட்டத்தால் 19.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 148 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இதில் ரெய்னா ஆட்டமிழக்காமல் 43 பந்துகளில் (5பவுண்டரிகள், 2சிக்ஸர்கள் உட்பட) 54 ஓட்டங்களையும் தோனி 25 பந்துகளில் (4பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 37 ஓட்டங்களையும் மற்றும் பட்டேல் 20 ஓட்டங்களையும் எடுத்தனர். ஆட்டநாயகனாக ரெய்னா தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ஜோராக அரையிறுதிக்குள் நுழைந்தது.

இதேவேளை கில்கிறிஸ் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணி தான் ஆடிய 14-வதும் இறுதியுமான லீக் ஆட்டத்தில் 12-வது தோல்வியைச் சந்தித்து புள்ளிகளின் அடிப்படையில் 8-வதும் இறுதியுமான அணியாக விடைபெற்றது. (5)

## டெண்டுல்கர் அணிக்கு ஆறுதல் வெற்றி

(பெங்களூர்)

டில்கார பெர்னாண்டோவின் சிறப்பான பந்துவீச்சால் மும்பை இந்தியன்ஸ் அணி 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியை வெற்றி பெற்று ஆறுதல் அடைந்தது.

ஐ.பி.எல் தொடரில் நேற்று மாலை பெங்களூரில் நடைபெற்ற லீக் சுற்றின் 55-வது ஆட்டத்தில் டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் ராவிட் தலைமையிலான பெங்களூர் றோயல்ஸ் சலஞ்சர்ஸ் அணியும் மோதின.

இரு அணிகளும் அரையிறுதியில் இருந்து வெளியேறிய நிலையில் பெரிதும் எதிர்பார்க்கப்படாத ஆட்டமாக இது நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டெண்டுல்கர் முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தார்.

போட்டி தாமதமாக ஆரம்பமானமையால் அணிக்கு தலா 18 ஓவர்கள் எனக் குறைக்கப்பட்டது. இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல்ஸ் சலஞ்ஜர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 18 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 122 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது.

இதில் வைற் 26 ஓட்டங்களையும் வினே குமார் 23 ஓட்டங்களையும் மற்றும் கோஸ்வாமி 20 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் டில்கார பெர்னாண்டோ 4 ஓவர்கள் பந்துவீசி 18 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 4விக்கெட்டுக்களையும் சிமித் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 18 ஓவர்களில் 123 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலகுவான இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி ஜெயசூர்யவின்அதிரடி அரைச்சதம் கைகொடுக்க 16 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 126 ஓட்டங்க்ளை எடுத்து 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதில் சனத் ஜெயசூர்யா 37 பந்துகளில் (4 பவுண்டரிகள்,4 சிக்ஸர்கள் உட்பட) 54 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்ததுடன் டெண்டுல்கர் 43 பந்துகளில் (4பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 40 ஓட்டங்களையும் உத்தப்பா 19 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஆட்டநாயகனாக டில்கார பெர்னாண்டோ தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணி தான் ஆடிய 14-வதும் இறுதியுமான லீக் ஆட்டத்தில் பெறும் 7-வது வெற்றி இதுவாகும்.

இதேவேளை இத் தோல்வியுடன் ராவிட் தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி தான் விளையாடிய 14-வது லீக் ஆட்டத்தில் சந்திக்கும் 10-வது தோல்வி இதுவாகும். (5)

## ராஜஸ்தான்- டில்லி அணிகள் அரையிறுதியில் நாளை மோதல்

### மற்றொரு ஆட்டத்தில் சென்னை-பஞ்சாப்

(ஐதராபாத்)

ஐ.பி.எல். இருபது-20 கிரிக்கெற் தொடர் கடந்த மாதம் 18ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இதில் சென்னை சுப்பர் கிங்ஸ்,ராஜஸ் தான் றோயல்ஸ், மும்பை இந்தியன்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ், கிங்ஸ் லெவின் பஞ்சாப், பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ், டில்லி டேர் டேவில்ஸ், ஐதராபாத் டெக்கான் சார்ஜர்ஸ் ஆகிய 8 அணிகள் பங்கேற்றன.

ஒவ்வொரு அணியும், மற்ற அணியுடன் தலா 2 முறை மோதவேண்டும். புள்ளிகள் அடிப்படையில் முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரை இறுதியில் நுழையும்.

ராஜஸ்தான் றோயல்ஸ், கிங்ஸ் லெவின் பஞ்சாப், டில்லி டேர் டேவில்ஸ் ஆகிய அணிகள் ஏற்கனவே அரை இறுதியில் நுழைந்தன. நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி டெக்கான் சார்ஜர்ஸ் அணியை 7 விக்கெற்றால் வென்றதால் அரை இறுதிக்கு தகுதி பெற்றது.

முதல் அரை இறுதியில் முதல் இடத்தை பிடித்த அணியும் 4ஆவது இடத்தை பிடித்த அணியும் மோதும். ராஜஸ்தான் றோயல்ஸ் முதலாவதாகவுள்ளது. டெல்லி அணி 15 புள்ளியுடன் 4ஆவது இடத்தில் உள்ளது.

அதன்படி முதல் அரை இறுதியில் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்சும்-சேவாக் தலைமையிலான டில்லி டேர்டேவில்ஸ் அணியும் மோதுகின்றன. இந்த ஆட்டம் நாளை மும்பையில் நடக்கிறது.

2ஆவது அரை இறுதியில் லீக் முடிவில் 2ஆவது இடத்தை பிடிக்கும் அணியும், 3ஆவது இடத்தை பிடிக்கும் அணியும் மோதும். கிங்ஸ் லெவின் பஞ்சாப் 18 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், 2ஆவது அரை இறுதியில் யுவராஜ் சிங் தலைமையிலான கிங்ஸ்லெவின்பஞ்சாப் அணியும்தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் மோதுகின்றன.

இந்த ஆட்டம் நாளை மறுதினம் மும்பையில் நடக்கிறது. இறுதிப்போட்டி ஜூன் 1ஆம் திகதி நடக்கிறது. கொல்கத்தா, மும்பை பெங்களூர், ஐதராபாத் அணிகள் அரை இறுதி வாய்ப்பை இழந்துவிட்டன. (5)

## ஆண்டுக்கு 2 ஐ.பி.எல் தொடர்; வீரர்கள் ஓய்வுபெறும் அபாயம்

### சேவாக் கவலை

(டில்லி)

ஐ.பி.எல் போட்டிகளை ஆண்டுக்கு இரண்டு முறை நடத்தினால் வீரர்கள் முன்னதாகவே ஓய்வு பெறும் அபாயம் இருப்பதாக டில்லி அணியின் தலைவர் சேவாக் கவலை தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல் இருபது -20 தொடருக்கு பலத்த வரவேற்பு கிடைத்துள்ளது. இதையடுத்து முதல் மூன்று ஆண்டுகளுக்குப் பின் இத் தொடர் ஆண்டுக்கு இரண்டு முறை மே மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் நடத்தப்படும் என்று ஐ.பி.எல் தலைவர் லலித் மோடி தெரிவித்தார்.

ஏற்கனவே ஐ.பி.எல் தொடரில் விளையாடுவதற்காக வீரர்கள் தங்களுடைய தேசிய அணிகளை புறக்கணித்து முன்னதாகவே ஓய்வு பெறும் சூழ்நிலை ஏற்பட் டுள்ளது.

இந்நிலையில் ஆண்டுக்கு இரண்டு முறை ஐ.பி.எல் தொடர் நடத்துவது மேலும் சிக்கலை உண்டாக்கலாம்.

இது குறித்து சேவாக் கூறியது,

ஐ.பி.எல் தொடர் ஆண்டுக்கு இரண்டு முறை நடத்தப்பட்டால் வீரர்கள் முன்கூட்டியே ஓய்வுபெறும் அபாயம் இருக்கிறது. சர்வதேச போட்டிகளின் கால அட்டவணையையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பெரும்பாலான மக்கள் ஐ.பி.எல் போட்டிகளை விட சர்வதேச போட்டிகளைத் தான் அதிகம் விரும்புகிறார்கள். பாகிஸ்தானில் நடக்கவுள்ள ஆசிய கோப்பை மற்றும் பங்களாதேஷில் நடக்கவுள்ள முத்தரப்பு தொடருக்கான இந்திய அணியை தேர்வு செய்யும்போது ஐ.பி.எல் தொடரையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்தத் தொடரில் பல இளம் வீரர்கள் சிறப்பாக விளையாடினார்கள். எங்கள் அணியில் தவான்,யோ மகேஷ்,சங்வான் போன்ற வீரர்களை குறிப்பிடலாம்.

இந்த ஆண்டு பல சர்வதேச போட்டிகள் நடக்கவுள்ளன. இவற்றில் முன்னணி வீரர்களுடன் இணைந்து விளையாடும் வாய்ப்பை இளம் வீரர்களுக்கு தேர்வாளர்கள் வழங்க வேண்டும். இவ்வாறு சேவாக் கூறினார். (5)

## ஐ.பி.எல். தொடர் மூலம் ஷாருக்கானுக்கு ரூ.16 கோடி இலாபம்

(கொல்கத்தா)

முதலாவது ஐ.பி.எல் இருபது -20 கிரிக்கெற் தொடரின் மூலம் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் உரிமையாளரான இந்தி நடிகர் ஷாருக்கான் ரூ. 16 கோடி லாபம் சம்பாதித்து இருப்பதாக தகவல்கள் வெளியாகி இருக்கின்றன. அரை இறுதி வாய்ப்பை இழந்துவிட்ட கொல்கத்தா அணி 14 லீக் ஆட்டத்தில் விளையாடி 6 இல் வெற்றி பெற்றிருக்கிறது.



ஓர் அணியின் உரிமைக்கான ஒப்பந்தம் 10 ஆண்டுகள் ஆகும். இந்த வகையில் முதலாம் ஆண்டுக்கு ரூ.31 கோடியும், வீரர்கள் ஏலம் எடுத்த வகையில் ரூ.20 கோடியும் மற்ற நிர்வாக செலவுகளுக்காக ரூ.20 கோடியும் ஷாருக்கான் செலவிட்டு இருக்கிறார். ஆக மொத்தம் அவர் செலவிட்ட தொகை சுமார் ரூ. 71 கோடி .

அதே சமயம் வரவாக தொலைக்காட்சி ஒளிபரப்பு பங்கீட்டில் சுமார் ரூ.24 கோடியும் டிக்கெற் விற்பனை மூலம் ரூ.20 கோடியும் அள்ளி இருக்கிறார். மேலும் ஸ்பொன்சர்கள் வரவையும் கணக்கிட்டால் அவர் ஏறத்தாழ மொத்தம் ரூ.87 கோடி சம்பாதித்திருக்கிறார். இது அவர் செலவிட்ட தொகையை விட ரூ.16 கோடி அதிகமாகும். சந்தைப்படுத்தல் நிபுணர்கள் கருத்து கணித்து இந்த புள்ளி விபரங்களை வெளியிட்டு இருக்கிறார்கள். (5)

# இன்று ஒரு தகவல்

## வாடிக்கையாளரைக் கவர்வது எப்படி?

"எனக்கு அதிர்ஷ்டமே இல்லை சார்!" என்றார் ஒருவர். ஏன் அப்படிச் சொல்கிறீர்கள் என்று கேட்டேன்.

வியாபாரம் பண்ணலாம் என்று ஒரு கடை வைத்தேன். வேண்டியவர்கள் கூட என் கடையில் வந்து எதுவும் வாங்குகிறார்கள் இல்லை. எல்லோரும் அடுத்த கடைக்குத்தான் போகிறார்கள்" என்று சொல்லி அலுத்துக் கொண்டார் அவர். "இதற்குப் போய் அதிர்ஷ்டம் இல்லை என்று சொல்லாதீர்கள். வாடிக்கையாளரைக் கவர்வது எப்படி என்பது உங்களுக்குத் தெரியவில்லை. அதுதான் குறை". என்றேன். "உங்களுக்குத் தெரிந்தால் அந்த ரகசியத்தை எனக்கு சொல்லிக் கொடுங்கள்" என்று கேட்டார் அவர். சரி என்று சொல்ல ஆரம்பித்தேன்.

கடை வைத்திருக்கும் எல்லோரும் இதைக் காதில் வாங்கிக் கொள்ளுங்கள். எப்பொழுதும் பணம் சம்பாதிப்பதிலேயே குறியாக இருக்காதீர்கள். அதைவிட முக்கியமாக நீங்கள் சம்பாதிக்க வேண்டியது வாடிக்கையாளரின் மனநிறைவு! வருபவர்கள் திருப்தியுடன் போகவேண்டும். அதில் கவனமாக இருக்க வேண்டும்.

கடைக்கு வரும் ஒருவர் ஏதாவது ஒரு குறை சொல்கிறார் என்றால் அதை அலட்சியப்படுத்தக் கூடாது. அக்கறையுடன் கேட்க வேண்டும்.

"அப்படியா சார்... அதை நான் அவசியம் கவனிக்கிறேன்!" என்று கூறவேண்டும். "சார் நேற்று உங்களுடைய கடையில் இதை வாங்கிக் கொண்டு போனேன்... வீட்டில் வேண்டாம் என்று சொல்கிறார்கள் என்று ஒருவர் ஒரு பொருளைத் திருப்பிக் கொடுத்தால் உடனே நீங்கள் முகம் சுளிக்கக்கூடாது. எரிச்சல் படக்கூடாது. வழக்கம் போல முக மலர்ச்சியுடன் அதைத் திருப்பி வாங்கிக் கொள்ளுங்கள்.

குறிப்பிட்ட அளவு ரூபாய்க்கு மேல் சாமான் வாங்கினால் அன்பளிப்பு ஏதாவது கொடுக்கலாம். பண்டிகைக்காலங்களிலும் ஏதாவது பொருத்தமாக அன்பளிப்புக் கொடுக்கலாம். நீங்கள் கொடுப்பது சாதாரண பொருளாக இருந்தாலும் அது வாங்குபவர் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்தும். எதுவும் உங்களால் கொடுக்க முடியவில்லை என்றால் கூட உங்கள் முகம் நிறைந்த சிரிப்பையாவது கொடுங்கள். அதுபோதும். உங்கள் கடையில் இல்லாத ஒரு பொருளை வாடிக்கையாளர் வந்து கேட்கிறார் என்றால் உடனே இல்லை! என்று முகத்தில் அடிப்பது மாதிரி சொல்லி விடாதீர்கள்.

"கொஞ்சம் உட்காருங்க சார்" என்று சொல்லி உங்கள் பணியாளரை அனுப்பி வெளியிலிருந்து வாங்கிவரச் சொல்லி அவரிடம் கொடுங்கள்.

உங்கள் கடைக்கு வரும் சிலபேர் தங்களது குழந்தைகளையும் கூட்டிக் கொண்டு வந்தால் முதலில் அந்தக் குழந்தைகளை கவனிக்க வேண்டும். கன்னத்தை கிள்ள வேண்டும். அதற்கு ஏதாவது மிட்டாய், பிஸ்கட் வாங்கிக் கொடுத்து அதனுடைய கவனத்தைக் கவர வேண்டும். அதன் பின்னர் பெரியவர்களைக் கவனிக்கலாம்.

உங்கள் கடையில் வேலை செய்யும் பணியாளர்கள் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும். சிரித்த முகத்துடனும், சுறுசுறுப்புடனும் நடந்து கொள்ள வேண்டும்.

அதிகமாக பொருள் வாங்கும் ஒருவரிடம் அதிக மரியாதையுடனும் குறைவாக பொருள் வாங்குபவரிடம் வேறுவிதமாகவும் நடந்து கொள்ளக் கூடாது. 5 ரூபாய்க்கு வாங்கினாலும் சரி 500 ரூபாய்க்கு வாங்கினாலும் சரி அவர்களிடம் நீங்கள் காட்டும் மரியாதையில் வித்தியாசம் இருக்கக் கூடாது.

எல்லாவற்றிற்கும் மேலாக உங்களுடைய கடையில் பொருள் வாங்கினால், அது உண்மையானதாக, தரமுள்ளதாக இருக்கும் என்ற எண்ணம் மக்களுக்கு வர வேண்டும். அதனால் தரமான பொருட்களையே நீங்கள் உங்கள் கடையில் வைத்திருக்க வேண்டும்.

இது வரை நான் சொன்னதையெல்லாம் கவனத்தில் வைத்துக் கொண்டு கடையை ஆரம்பியுங்கள். வியாபாரம் பிய்த்துக்கொண்டு போகவில்லை என்றால் அதன் பின் என்னிடம் கேளுங்கள். இந்த யோசனைகளில் நீங்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டிய ஒரு விஷயம் உண்டு... அது என்னவென்று தெரிந்து கொள்ள இதைக் கேளுங்கள். என்னுடைய நண்பர் ஒருவர் வந்தார்.

உங்களுடைய யோசனையைக் கேட்டு நான் அறை வாங்கினது தான் மிச்சம்!" என்றார்.

"என்ன ஆச்சு?" என்று கேட்டேன்.

"எங்கள் கடைக்கு ஒரு பெரியம்மா குழந்தையைத் தூக்கிக்கொண்டு வந்தார். உங்களது யோசனைப்படி அந்தக் குழந்தையின் கன்னத்தைக்கிள்ள வேண்டு மென்று முயற்சி செய்தேன்... திடீரென அது தலையைக் குனிந்து விட்டது. என் கை குழந்தையை தூக்கி வந்தவரின் கன்னத்தைக் கிள்ளிவிட்டது சார்! அது தான் இப்படி ஆகிவிட்டது!" என்றார் கன்னத்தைத் தடவிக் கொண்டே!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஜீ.எஸ்.பி. பிளஸ் கோட்டாவை நீடிக்குமாறு ஐரோப்பிய ஒன்றியத்திடம் ரணில் கோரிக்கை

## ஒரு இலட்சத்து அதிகமானோர் தொழில் இழப்பர் எனவும் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆடைத் தொழிற்றுறைக்கான



ஜி.எஸ்.பி.பிளஸ் கோட்டாவை நீடிக்குமாறு ஐரோப்பிய ஒன்றியத்தின் நிறுவன இணைப்பு மற்றும் தகவல் துறை தொடர்பான பிரதிதலைவர் மாகொட்வெல்ட்ஸ் ஹோம், வெளிநாடு தொடர்பான ஆணையாளர் பெனீட்டாபொரோ மற்றும் வர்த்தக ஆணையாளர் பீட்டர்மெண்டல்ஸன் ஆகியோரை கடந்த திங்கட்கிழமை சந்தித்து எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தக் கோட்டாவை நீடிக்குமாறு இலங்கை அரசாங்கம் இதுவரை உத்தியோகபூர்வமாக கோரிக்கை விடுக்கவில்லை. கோரிக்கை விடுக்கும்போது அது தொடர்பாக கவனம் செலுத்தப்படும் என ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

2005ஆம் ஆண்டு ஜீ.எஸ்.பி. பிளஸ் கோட்டா உரித்துடையதுக்கான தகுதிகளை பூர்த்தி செய்துள்ள ஏனைய நாடுகளுடன் இலங்கை கோரிக்கை விடுக்கும் போது கவனத்தில் கொள்ளப்படும்.

[illegible] இக்கோட்டா நீடிக்கப்படாது விட்டால் [illegible] ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் தொழில் வாய்ப்புக்களை இழக்க நேரிடும் [illegible] தெரிவித்துள்ளார். (அ-5)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் பரீட்சை பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினால் மார்ச் 2008 இல் நடத்தப்பட்ட 2008, 2009 ஆம் ஆண்டுகளில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள கணித, விஞ்ஞானப்பிரிவுகளிலுள்ள மாண வர்களுக்கான பரீட்சையில் முதல் 25 இடங்களில் தேர்வான மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு.

### தரம் -13
### 2008 கணிதப்பிரிவு

ரி.முகுந்தன்-ஹாட்லிக் கல்லூரி, எஸ்.செயந்தன் -உடுப்பிட்டி அ.மி.கல்லூரி,கே.வாகீசன்-ஹாட்லி கல்லூரி, ப.நிரோசன்- யாழ்.இந்துக் கல்லூரி, ஆர்.ஹரீசன்-ஹாட்லிக் கல்லூரி, ஆர்.ரஜீவன் -ஹாட்லிக் கல்லூரி, கு.கஜரூபன்-விக்ரோறியாக் கல்லூரி, எஸ்.சத்தியவதனன்-ஹாட்லிக்கல்லூரி, எம்.செந்தூரன்-ஹாட்லிக்கல்லூரி,

கு.ஜெயமோகன்-யாழ்.இந்துக் கல்லூரி, எஸ்.ஆரூரன் - யாழ்ப்பாணக் கல்லூரி, பா.ராஜ்குமார்-யாழ்.இந்துக்கல்லூரி, இ.ராஜ்குமார்-நெல்லியடி ம.ம.வி., எஸ்.ஹரிதரன்-ஹாட்லிக்கல்லூரி, ஆர்.கோபிராகவன் -உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, ச.செந்தில்குமரன்- யாழ்.இந்துக்கல்லூரி, சிறி.யாதவன்-யாழ். இந்துக்கல்லூரி.

எஸ்.மதுசா-கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரி, வி.மயூரன்-யாழ். இந்துக்கல்லூரி, எஸ். அரவிந்-கொக்குவில் இந்துக் கல்லூரி, எஸ்.சரவணன்-கொக்குவில் இந்துக் கல்லூரி, ஆ.பார்த்தீபன்-யாழ். இந்துக்கல்லூரி. ஆர்.பிரதாபன்-ஹாட்லிக்கல்லூரி, பி.கிரிபரன்-கொக்குவில் இந்துக்கல்லூரி, ஆர்.கஜனன்-சென்ஜோன்ஸ் கல்லூரி.

### தரம் 13 2008
### விஞ்ஞானப்பிரிவு

அ.அல்பேட் நிமலன்-யாழ்.இந்துக்கல்லூரி, ச.ரகுராஜ்-யாழ்.இந்துக்கல்லூரி, ந.கௌசிகன் - யாழ். இந்துக்கல்லூரி, ந.மோகனப்பிரியன் - யாழ். ஹாட்லிக் கல்லூரி, செள.விசாகன்-யாழ். இந்துக்கல்லூரி, அ.கீர்த்திகன்- யாழ். இந்துக் கல்லூரி, ம.பிரதீபன்- யாழ். இந்துக் கல்லூரி, கே.ராகுலன்-கொக்குவில் இந்துக்கல்லூரி.

சி.திவமைந்தன்-யாழ். இந்துக் கல்லூரி, வி.ஜெயராசா- யாழ். இந்துக்கல்லூரி, பி.பிரகலாதன்-உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, செ.லைர்ந்தனன்- யாழ். இந்துக்கல்லூரி, எல்.லிஜா- சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, ப.நிதீஸ்பன்-ஹாட்லி கல்லூரி, சே.டல்செனி-கொக்குவில் இந்துக் கல்லூரி, எஸ்.சசிகரன்-ஹாட்லிக் கல்லூரி, வி.பிரசாந்-ஹாட்லிக் கல்லூரி, ப.மிதுனராஜ்- யாழ். இந்துக் கல்லூரி, கே.நிரோஜி-வேம்படி மகளிர்கல்லூரி, எஸ்.கார்த்திஜா-மெதடிஸ்த மகளிர் கல்லூரி, பி.நிரோஜினி-நெல்லியடி ம.ம.வி., ஏ.சர்மிகா- வேம்படி மகளிர் கல்லூரி, எஸ்.பகீரதி-யாழ். இந்துக்கல்லூரி, எஸ்.மடோனா கஜந்தினி-சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, எஸ்.பாகினி-மெதடிஸ்த மகளிர் கல்லூரி.

### தரம் 12
### 2009 கணிதப்பிரிவு

ஏ.ஜோன்நிராஜ் - ஹாட்லிக்கல்லூரி, எஸ்.பிரசாந் -ஹாட்லிகல்லூரி, க.எழில்வேள் யாழ்.இந்துக் கல்லூரி, எஸ்.தனுஜந்தன்-விக்ரோறியாக் கல்லூரி, [illegible] ரி.ஜெயந்தன்- ஹாட்லிக்கல்லூரி, எல்.சுரேஸ்குமார் -கொக்குவில் இந்துக்கல்லூரி, [illegible] ஹாட்லிகல்லூரி, ஏ.கஜந்தன்-சென்ஜோன்ஸ் கல்லூரி, எஸ்.கோகுல் - ஹாட்லிக்கல்லூரி, கே.அபிராம்-கொக்குவில் இந்துக்கல்லூரி, எஸ்.சிவசுதன்-யாழ். இந்துக் கல்லூரி, எஸ்.சபேசன்-கொக்குவில் இந்துக்கல்லூரி. [illegible] பூ.தனுஷா-வேம்படி மகளிர் கல்லூரி, எஸ்.தனஞ்செயன் - ஹாட்லிகல்லூரி, எஸ்.சிந்துஜன்-கொக்குவில் இந்துக்கல்லூரி, ச.அருணன்-யாழ். இந்துக்கல்லூரி. பா.அருண் -இந்துக்கல்லூரி, ம.ராகவன்- யாழ். இந்துக்கல்லூரி, அ.புருசோத்தமன் -யாழ். இந்துக் கல்லூரி, ரி. திவ்வியராஜ்-ஹாட்லிக் கல்லூரி, ரி.அந்தோனி-சென்பற்றிக்ஸ் கல்லூரி, உ. தனசிறி -யாழ். இந்துக்கல்லூரி, இ. கோபிராஜ் யாழ். இந்துக்கல்லூரி.

### தரம் 12
### 2009 விஞ்ஞானப்பிரிவு

எஸ். ஜதுகுலன்-யாழ். இந்துக் கல்லூரி, ஏ.எஸ்.பிரசாந்-சென்பற்றிக்ஸ்கல்லூரி, பி.சுவாணி-வேம்படி மகளிர்கல்லூரி, கே. லிவேன்ஜா யாழ்ப்பாணக்கல்லூரி, பி.கபிலேசன்-யாழ். இந்துக்கல்லூரி, [illegible] காஸ்-விக்ரோறியாக்கல்லூரி, எஸ். ரகுவீரன் -நெல்லியடி ம.ம.வி., யு.சாலினி-உடுவில் மகளிர் கல்லூரி, எஸ். சுதர்சன்-யாழ். இந்துக்கல்லூரி, ரி. சஞ்சயன்-யாழ். இந்துக்கல்லூரி, எஸ். லக்சிகா- வேம்படி மகளிர்கல்லூரி,ஜே.பி.ஜோன் செல்ரன்-சென்பற்றிக்ஸ் கல்லூரி, எஸ். சரண்யா -வேம்படி மகளிர் கல்லூரி.

ஜே.பி.ஜோன்செல்ரன்-சென் பற்றிக்ஸ் கல்லூரி, எஸ்.சரண்ஜா-வேம்படி மகளிர் கல்லூரி, ஜே.பி. மோரிசில்விஜா-யாழ்ப்பாணக் கல்லூரி, எஸ். ஆர்திரயன்-யாழ். இந்துக்கல்லூரி, ஆர். குயின்ரன்-கொக்கு வில் இந்துக்கல்லூரி. கே.முரளி-யாழ். இந்துக்கல்லூரி, பி.பி.பெனடிக்ற்-சென்ஜோன்ஸ் கல்லூரி.

கே.சங்கர்-ஹாட்லி கல்லூரி, எம்.லக்ஷன்-யாழ். இந்துக் கல்லூரி, ஜே.ஜெனனி-வேம்படி மகளிர் கல்லூரி, பி.பிரசாத்-யாழ். இந்துக்கல்லூரி, ரி.சசீந்தன்-யாழ். இந்துக்கல்லூரி, பி.ஞானசேகர்-யாழ். இந்துக்கல்லூரி, சே.யோகானந்தி-வேம்படி மகளிர் கல்லூரி.

# இராசிபலன்

29.05.2008

(வைகாசி 16, வியாழக்கிழமை)

நவமி பிற்பகல் 02.20 மணிவரை

பூரட்டாதி பிற்பகல் 04.07 மணிவரை

இராகுகாலம் 01.22-02.52 மணிவரை

சுபநேரம்-07.22-08.52 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | சுபசெலவு, காரிய அலைச்சல், வீண் மனஸ்தாபம், சயனசுக்குறைவு. |
| இடபம் | தெய்வதரிசனம், எடுத்த காரியம், கைகூடும், பொருள்சேர்க்கை. |
| மிதுனம் | கடின உழைப்பு, தந்தைவழி உறவு, கலந்துரையாடல். |
| கடகம் | புதிய முயற்சி, தந்தை வழியுறவு. தெய்வசிந்தை, கட்டுப்பாடு. |
| சிங்கம் | அபகீர்த்தி, காரிய தடங்கல், போசனசுகம், பிரயாணம். |
| கன்னி | எடுத்த காரியம் கைகூடும், செல்வாக்கு, தெய்வசிந்தை. |
| துலாம் | தேகநலன், பகைவர் நேசம், காரிய அனுகூலம், சுபநிகழ்வு. |
| விருச்சிகம் | வியாபார விருத்தி, மனக்கிலேசம், சொத்துப்பிணக்கு, பணக்குறைவு. |
| தனுசு | சுபசெலவு, ஆரோக்கியக்குறைவு, முயற்சிதாமதம், கல்வியல் ஆர்வம். |
| மகரம் | உறவினர் உதவி, தனவருவாய், காரியநன்மை, தொழில்முன்னேற்றம். |
| கும்பம் | கோபப்படுதல், காரிய தடங்கல், பணவிரயம், நிலைமாற்றம். |
| மீனம் | கற்பனை மிகுதி, தெய்வசிந்தை, நல்ல முயற்சி, நண்பர்கள் சந்திப்பு. |

வளவன்

## வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சதாவதானி கதிரவேற்பிள்ளை சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க 21 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 1ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கத் தலைவர் தி.சோமாஸ்கந்தராசா தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட சி.க.கூ.ச.சமாஜத் தலைவர் சு. சிவசுப்பிரமணியம், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை செயலாளர் சி.சண்முகசுந்தரம், ஹற்றன் நஷனல் வங்கி நெல்லியடிக் கிளை முகாமையாளர் ப.சங்கர், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் என். பாலகுமார் கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட சி.க.கூ.சங்க உபதலைவர் க.கமலேந்திரன், புலோலி மேற்கு கிராம உத்தியோகத்தர் என்.லம்போதரன், புலோலி மத்தி கிராம உத்தியோகத்தர் அ.உமாசங்கர், பரு.சி. க.கூ.சங்க பிராந்திய சபைத் தலைவர் தி.சிவச்செல்வம், சதாவதானி கதிரவேற்பிள்ளை ச.ச.நிலையத் தலைவர் கி.குகநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-35)

## தமிழ்த்தினப் போட்டிக்கான விண்ணப்பப் படிவங்கள்

(அல்வாய்)

பருத்தித்துறை கோட்டக்கல்வி அலுவலகத்தினால் நடாத்தப்படவுள்ள தமிழ்த்தினப் போட்டிகளில் பங்குபற்றுவோரின் விண்ணப்பப் படிவங்களை, இரு பிரதிகளில் யூன் மாதம் 6ஆம் திகதிக்கு முன்னர் கோட்டக் கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கோட்டக் கல்வி அதிகாரி பா.இரகுநாதன் கேட்டுக் கொள்கிறார். (ஓ-19)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

புலோலி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக சொற்பொழிவுத் தொடரில் ''இதிகாசங்கள்'' என்னும் விடயம் பற்றி தமிழ் ஞான வித்தகர் பொன்.சுகந்தன் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (ஓ-35)

## இரண்டாவது ஆண்டு நிறைவு தின விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மத்தியஸ்த சபையின் 2ஆவது ஆண்டு நிறைவு தின விழா 1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்தில் தெல்லிப்பளை மத்தியஸ்த சபை, தவிசாளர் கு.சிவலிங்கம் (J.P)யின் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ், கௌரவ விருந்தினர்களாக மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி.ச.இளங்கோவன், தெல்லிப்பழை பிரதேச செயலர் சு.முரளிதரன், இளைப்பாறிய மாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசு, சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட மத்தியஸ்த சபை இணைப்பாளர் க.கணேசராசா, தெல்லிப்பழை பிரதேச, செயலக தலைமைப் பீட கிராம அலுவலர் கு.சாந்தமோகன், மல்லாகம் விசாலாட்சி வித்தியாலய அதிபர் கே. இராசநாயகம் மத்தியஸ்தநிகழ்ச்சித்திட்ட உதவியாளர் ப.சனாதனன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ)

# ஒரு சில தேவைகளைக் கூட நிறைவேற்ற போதாத பொதுசன உதவிப்பணம் அதிகரிக்கப்பட வேண்டும்

## முன்னாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறும் ஏழைகள், நோயாளிகள், அனாதைகள், இயலாதவர்கள், ஊனமுற்றவர்கள் ஆகியோருக்கான உதவித்தொகை பணம் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக மாற்றமின்றி உள்ளது.

இதனால் இப் பணம் இன்றைய காலத் தேவைகளில் ஒரு சில சில்லறைத் தேவைகளைக் கூட நிறைவேற்றமுடியாத அளவிற்கு பெறுமதியிழந்துள்ளது.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வெளிநாடுகளில் இவ்வாறானவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை அதிகமானது. அவர்கள் அப் பணத்தை தேவையான தகுதி விதிகளுக்கேற்ப வழங்கி வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்றார்கள். இன்று யாழ்.மாவட்டத்தில் 1 இறாத்தல் பாண் 50 ரூபாவுக்கு விற்கப்படுகிறது.

ஆனால் பொது சன மாதாந்த உதவிப் பணம் 100ரூபா முதல் 500 ரூபா வரை வழங்கப்படுகிறது. எனவே இப் பணத்தை உயர்த்தி அவர்களது தகுதி விதிக்கேற்ப வழங்க முன்வரவேண்டும். (அ-5)

# தும்புத் தொழிற்சாலை நிறுவுவதற்கு யு.என்.ஓ.பி.நிறுவன நிதி உதவி

(மருதங்கேணி)

யு.என்.ஒ.பி.நிறுவனம் ஆவரங்கால் மேற்கு விவேகானந்தா சனசமூக நிலையத்திற்கு, தும்புத் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கும், சுயதொழில் செய்யவும் ரூபா 26 இலட்சம் வழங்கியுள்ளது.

இந் நிதியிலிருந்து 5 இலட்ச ரூபாவை 10 பேருக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதம் தோல் உற்பத்தி மற்றும் செருப்பு உற்பத்திக்காக சுழற்சி முறைக் கடனாக வழங்கப்படவுள்ளது.

மிகுதி 21 இலட்ச ரூபா தும்புத் தொழிற்சாலை அமைப்பதற்கும் இதன்மூலம் தும்பு உற்பத்தி செய்வதற்கும் பயன்படுத்தப்படும்.

இத் தும்புத் தொழிற்சாலைக்கு பிரதேச செயலகத்தினால் 30 பெண்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு தும்புத் தொழில் பயிற்சியளிக்கப்பட்டு தும்பு உற்பத்தி செய்யப்படும்.

இச் செயற் திட்டத்தை கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ மோகன்றாஸ் மேற்பார்வையில், விவேகானந்த ச.ச.நிலையம் நெறிப்படுத்தி நடாத்தும். (ஓ-35)




# ஆசிரியர், மாணவர் விபரம்

(அல்வாய்)

பரு. கல்வி கோட்டத்தில் உள்ள 31 பாடசாலைகளினதும்.01.05.2008 இல் உள்ளவாறான மாணவர் விபரம், ஆசிரியர் விபரங்கள் மாகாணக் கல்வி அமைச்சினால் கோரப்பட்டுள்ளதால் சகல அதிபர்களும் மேற்படி விபரங்களை யூன் மாதம் 2ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

ஆசிரியர் விபரத்தில் கீழ்வரும் விடயங்கள் அனைத்தும் உள்ளடக்கப்பட வேண் டும்.

முழுப்பெயர்.பிறந்த திகதி,சேவை வகுப்பு தரம், கல்வித் தகைமை, தொழில் தகைமை, முதல் நியமனத் திகதி, நியமன வகை, தற்போதைய பாடசாலைக்கு நியமிக்கப்பட்ட திகதி, கஷ்டப் பிரதேசத்தில் சேவையாற்றிய காலம், வெளிமாவட்டத்தில் சேவையாற்றிய காலம், கற்பிக்கும் தரங்கள், கற்பிக்கும் பிரதான பாடங்கள், நேரசூசியில் ஒதுக்கப்பட்ட பாடவேளை, நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக வழங்கப்பட்ட வேறு பொறுப்புக்கள் ஆகியன உள்ளடக்கப்பட வேண்டும். (ஓ-19)

# சர்வதேச புகைப்பொருள் எதிர்ப்பு தினம் மே 31

சர்வதேச புகைப்பொருள் எதிர்ப்பு தினத்தை (மே 31) முன்னிட்டு வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடாத்தும் நிகழ்வுகள் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1மணிக்கு வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத் தலைவர் க.புஸ்பராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், யாழ். போதனா வைத்தியசாலை இரத்தவங்கி பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி இ. சிவசங்கர், அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அதிபர் நா.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அத்துடன் கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ஓ-7)

## வடமராட்சி கிழக்கில் தென்னை பயிர்ச்செய்கை

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கிலுள்ள கிராமங்களுக்கு அவர்களின் கோரிக்கைக்கு ஏற்ப தென்னை மரக்கன்றுகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன எனவும் தென்னை பயிர்ச்செய்கைக்குரிய கோரிக்கைகளை தென்னை பயிர்ச்செய்கை அபிவிருத்தி சபைக்கு அனுப்புதல் வேண்டுமெனவும் அதன்மூலம் மேற்குறிப்பிட்ட பயனகளை பெற்றுக்கொள்ளமுடியும் என வும் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (ஓ-35)

## ஆன்மீக சஞ்சிகை ஞானச்சுடர் வெளியீடு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வசந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் மாதம் தோறும் வெளியிடப்படும் ஆன்மீக சஞ்சிகையான ''ஞானச்சுடர்'' வைகாசி மாத வெளியீடு நாளை வெள்ளிக்கிழமை 10.30 மணியளவில் வெளியிடப்படும்.

இதன் வெளியீட்டுரையை கிராம அலுவலா சிவபாலசிங்கமும் மதிப்பீட்டுரையை அதிபர் செ.பரமேஸ்வரனும் வழங்கவுள்ளனர். (ஓ-35)

## சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 'இ' அட்டைகளுக்கு உலர் உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு-சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பல மாத இடை வெளியின் பின்னர், இடம்பெயர்ந்த மக்களுக்கான உலர் உணவு விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்த 'இ' அட்டை உடையவர்களுக்கு மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான உலர் உணவு விநியோகங்கள் தற்போது இடம்பெறுகின்றன.

வலி.தென் மேற்கு-சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மானிப்பாய், பண்டத்தரிப்பு, தெல்லிப்பழை ப.நோ.கூட்டுறவுச் சங்கக் கிளைகள் ஊடாக இந்த நிவாரணங்களைப் பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

## கமநல சேவை நிலையம் அமைப்பதில் தாமதம்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கில் கமநல சேவை நிலையம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான இடத்தை தெரிவுசெய்வதற்கு கம்க்கார அமைப்புக்களுக்கு பல தடவை கோரிக்கை விட்டும் இன்னமும் இடத்தைத் தெரிவுசெய்யப்படாததால் கமநல சேவை நிலையம் அமைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக, உதவி அரசாங்க அதிபர் எம். சிறிஸ்கந்தகுமார் தெரிவித்தார். (ஓ-35)

## காலம் கடந்த பதிவுகள்

மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பு(CHA), பொதுமக்களின் நன்மைகருதி இன்று காலை 9 மணிமுதல் பி.ப.3மணி வரை உடுவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கண்ணகி குடியிருப்பு அகதிமுகாமில் J/185, J/190, J/196 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கான காலம் கடந்த பிறப்பு, இறப்பு, விவாகம், காணி சம்பந்தமான பதிவுகளை இலவசமாக மேற்கொள்ளவுள்ளது. (ஓ)


## தீபா மேத்தாவின் Fire -திரைப்படம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் கல்விசார்/கலைத்துவம் சார் படக்காட்சித் தொடரில் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.30 மணிக்கு சர்வதேச புகழ்பெற்ற திரைப்பட நெறியாளரும் பெண்ணியவாதியுமான தீபா மேத்தாவின் Fire திரைப்படம் வீடியோக் காட்சியாக அரசறிவியல் விரிவுரை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

இது இரு இளம்பெண்களுக்கிடையே ஏற்படும் நட்புறவையும் அதனால் ஏற்படும் சிக்கலையும் சித்தரிக்கும் திரைப்படமாகும் திரையுலகில் பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்திய Water,Earth,Fire ஆகிய இவரது தொடர் திரைச்சித்திரத்தில் Water,Earth என்பன ஏற்கனவே பல்கலைக்கழகத்தில் திரையிடப்பட்டமை தெரிந்ததே.

திரைப்படக்காட்சியின் இறுதியில் திரைப்படம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறும். ஆர்வலர்கள் அனைவரும் வருகை தந்து பயன்பெற முடியுமென புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தெரிவிக்கின்றார். (ஓ)





யாழ்.கல்வி வலயத்தால் நல்லூர்க்கோட்டப் பாடசாலைகளில் கல்வி பயிலும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான சிறுவர் முகாமும் பெற்றோருக்கான விழிப்புணர்வுச் செயற்பாடும் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர் கருத்துரை வழங்குவதை முதலாவது படத்திலும், ஊரெழு கணேச வித்தியாசாலையில் கல்வி கற்கும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான சிறுவர் முகாமில் மாணவர்கள் இணைந்து நடாத்திய சிறுவர் அரங்க நிகழ்ச்சியை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# சர்வதேச ஆயுதக்குழுக்களுடன் விடுதலைப் புலிகளுக்குத் தொடர்பு

## கடற்படைத் தளபதி தெரிவிப்பு



(கொழும்பு)

புலனாய்வுத் தகவல்களை தமிழீழ விடுதலைப் புலிகள் சர்வதேச பயங்கரவாத அமைப்புக்களுடன் பகிர்ந்து கொள்வதாக குற்றஞ்சாட்டியிருக்கும் கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் வசந்த கருணாகொட மோசமான ஆயுதங்களுக்கு பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருட்களை திறந்த கடல் மார்க்கமாக தேவையான துறைமுகத்துக்கு அவர்கள் எடுத்துச் சென்றுதாக்குதல்களை நடத்தும் சக்தியைக் கொண்டிருப்பதாகக் கூறினார்.

தென்மேற்கு அரேபியாவின் துறைமுக நகரமான அடனில் கோல் கப்பல், ஜோர்தானில் அமெரிக்காவின் போர்க்கப்பல் மற்றும் பிரான்சின் லிம்பேர்க் கப்பல் தாக்கப்பட்டவற்றை இவற்றுக்கு உதாரணமாகக் கூறமுடியும் என அவர் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளால் நடத்தப்படும் தாக்குதல்களைப் போலவே இந்தத்தாக்குதல்களும் திட்டமிட்டு நடத்தப்பட்டிருப்பதால் விடுதலைப் புலிகளுக்கும் அந்தத் தாக்குதல்களுக்கும் தொடர்பு இருக்கலாம் என அவர் கூறினார்.

தொடர்புகள் இல்லாமல் செய்வது சாத்தியமற்றது. கடல்வழியான பயங்கரவாத செயற்பாடுகள் குறித்த தகவல்களை விடுதலைப் புலிகள் ஏனைய பயங்கரவாத அமைப்புக்களுக்கு வழங்குகின்றன என்பது புலனாகிறது என லண்டனில் நடைபெற்ற7-வது வருடாந்த எதிர்கால கடற்படைத் திட்டங்கள் மற்றும் தேவைகள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல்கள் பாரிய அழிவுகளைத் தரக்கூடிய இரசாயனப்பொருட்களை கடத்துவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

திறந்த கடல்வழிப் பாதையைப் பயன்படுத்தி விரும்பிய எந்தவொரு துறைமுகத்திற்கும் அவர்கள் தாக்குதல்களை நடத்த முடியும். அவற்றை தடுக்க இயலாது என இலங்கைக் கடற்படைத் தளபதி கூறினார்.

விடுதலைப் புலிகள் பெரும்பாலும் நீருக்கடியில் செல்லக்கூடிய சாதனங்களைப் பயன்படுத்தியே துறைமுகங்களில் தாக்குதல்களை நடத்துவதாக அவர் குறிப்பிட்டார். (ச-5)

# அல்லைப்பிட்டியின் அபிவிருத்திக்கு அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டியில் நிலவுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்ய சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளதாக சமூக சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சமூக சேவைகள் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

யாழ்.அல்லைப்பிட்டி பகுதியில் தற்போது 81 குடும்பங்களைச் சேர்ந்த 351பேர் வசித்து வருகின்றனர்.

இந்நிலையில் 63 குடும்பங்களைச் சேர்ந்த 199பேர் மீளக்குடியமர்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதுடன் 25 குடும்பங்களைச் சேர்ந்த 90 பேர் தங்களது இருப்பிடங்களுக்குச் சென்று பார்வையிட விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இதேநேரம் மண்கும்பான் பகுதியில்29 குடும்பங்களைச் சேர்ந்த 192பேர் மீளக் குடியமர்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் அல்லைப்பிட்டி மற்றும் மண்கும்பான் பகுதிகளில் நிலவுகின்ற பல்வேறு குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்ளும் முகமாக அப்பகுதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி பல்வேறு அமைப்புக்களைச் சார்ந்த பிரதிநிதிகள் நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அவரின் யாழ். அலுவலகத்தில் சந்தித்தனர்.

இதன்போது கடற்றொழிலில் ஈடுபடுவதற்கான வாய்ப்பினை அதிகரித்தல், அல்லைப்பிட்டிக்கான பேருந்துப்போக்குவரத்துச் சேவை, மின்சாரம், சனசமூக நிலையம், வாசிகசாலை, தேவாலயப்புனரமைப்பு, வீட்டுத்திட்டம், பண்ணைவேலை, தொழிற்பயிற்சி, விவசாய, கால்நடைகளுக்கான உபகரணங்கள், பாடசாலை கட்டடப்பணிகள் மற்றும் தளபாடங்கள், கடற்றொழில் உபகரணங்கள், மருத்துவமனை வசதி போன்ற பல்வேறு பொது வசதிகள் தொடர்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

நேற்றைய சந்திப்பில் யாழ். திட்டப்பணிப்பாளர், படைத்தரப்பின் உயர் அதிகாரிகள், அல்லைப்பிட்டி கிராம சேவை உத்தியோகத்தர், வேலணை பிரதேச செயலாளர், மின்சார சபை அதிகாரிகள், கியூடெக் மற்றும் கரித்தாஸ் தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட அமைச்சு அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (அ)

# நல்லூர் சயன்ஸ் அக்கடமியின் மாணவர் கௌரவிப்பும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சயன்ஸ் அக்கடமியின் மாணவர் கௌரவிப்பும், பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் முதலாம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நிறுவன பிரதான மண்டபத்தில் பிரதம ஆசிரியர் எஸ்.ஸ்ரனிஸ்லாஸ் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.அரியநாயகமும் அவரது பாரியாரும் கலந்து கொள்கின்றனர்.

கௌரவ விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் வீ.அருளானந்தமும் சிறப்பு விருந்தினர்களாக வலம்புரிப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் என்.விஜயசுந்தரம், உதயன் பத்திரிகை நிறுவனத்தின் பொது முகாமையாளர் கே.பாலசுப்பிரமணியம், வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் கே. கணேசபிள்ளை ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இந்நிகழ்வில் நல்லூர் சயன்ஸ் அக்கடமியில் கல்வி கற்று 2007ஆம் ஆண்டு க.பொ.த சா/த பரீட்சையில் சிறப்பாக சித்தி பெற்ற 50 மாணவர்களை கௌரவித்து பரிசு வழங்குதல் நிகழ்ச்சியும்,

தரம் 4 முதல் தரம் 11வரை சிறப்பான அடைவுகளைப் பெற்ற மாணவர்களுக்கு கணிப்பீட்டு அறிக்கையுடன், பரிசில் வழங்கும் நிகழ்ச்சியும், தரம் 5 வெற்றித் தேர்வு தொடர் பரீட்சையில் மாவட்ட நிலையில் முதலிடம் பெற்ற மாணவர்களுக்கு பரிசளிக்கும் நிகழ்வு என்பன நடைபெறவுள்ளன. (ச)

# பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் அடுத்த வாரம்

பல்கலைக்கழகங்களில் மாணவர்களை அனுமதிப்பதற்கான 2007/2008 கல்வியாண்டுக்குரிய இஸட் வெட்டுப்புள்ளிகள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் வெளியிடப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடளாவிய ரீதியிலுள்ள 15 பல்கலைக் கழகங்களுக்கும் அவற்றோடு இணைந்த உயர் கல்வி நிறுவனங்களுக்கும் புதிய கல்வி ஆண்டில் 20 ஆயிரம் மாணவர்களை அனுமதிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் பல்கலைக்கழகங்களில் புதிய பாடநெறிகளும் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

பரீட்சைத் திணைக்களத்தினால் க.பொ.த உயர்தர பரீட்சையின் மீளாய்வுப் பரீட்சைப் பெறுபேறுகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்படுவதில் ஏற்பட்ட தாமதமே வெட்டுப்புள்ளிகளை வெளியிடுவதிலும் தாமதத்தை ஏற்படுத்தியுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் முதல் வாரத்தில் இஸட் வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்டதும் மூன்றுவார காலத்துக்குள் பல்கலைக்கழக அனுமதி மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

# சத்துணவு விநியோகம்

(நல்லூர்)

நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கான சத்துணவுப் பொருட்கள் இன்றும் நாளையும் மதியம் 12 மணிக்குப் பின்னர் கொக்குவில் உப அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

சம்பந்தப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் தமக்குரிய சத்துணவுப் பொருட்களை பெற்றுக்கொள்ளுமாறு நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் அறிவித்துள்ளார். (ச)

# ஊரெழு றோயல் சம்பியனானது


(நாவாந்துறை)

யாழ்.உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடாத்திவந்த 7 பேர் பங்குபற்றும், விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டியில் இறுதியாட்டம் நேற்று முன்தினம் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இவ் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் ஊரெழுறோயல் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

சிறந்த வீரர்களாக ஊரெழு விளையாட்டுக்கழக வீரர் தர்மகுலநாதனும் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக வீரர் கில்டனும் தெரிவு செய்யப்பட்டனர். இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக நாவந்துறை சென். நீக்கிலஸ் ஆலய பங்குத்தந்தை ரவிச்சந்திரன் அடிகளார் கலந்து கொண்டார்.

(ச-5)




நல்லூர் றோட்டறக்ட் கழகத்தினால் யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு 35-வது தடவையாக இரத்த தானம் செய்யப்பட்டது. இந்நிகழ்வில் இரத்த தானம் செய்யவுள்ளவரை வைத்தியர் பரிசோதிப்பதையும் கழக உறுப்பினர்கள் இரத்ததானம் செய்வதையும் படங்களில் காணலாம்.

# இந்திய மீனவர் 19பேர் விடுவிப்பு

(மன்னார்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் பிரவேசித்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட 19 இந்திய மீனவர்களையும் விடுதலை செய்யுமாறு மன்னார் நீதிவான் டி.ஜே.பிரபாகரன் உத்தரவிட்டுள்ளார்.

இவர்கள் தமிழக இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து கடந்த முதலாம் திகதி கடலுக்குச் சென்ற பின்னர் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டது.

எனினும் பின்னர் அவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

பின்னர் இவர்கள் அநுராதபுரத்தில் தடுத்து வைக்கப்பட்டு நேற்று முன்தினம் மன்னார் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

(அ-5)

# இலவச பாடநூல்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு தேவையான இலவச பாடநூல்களை அதிபர்கள் நேரில் வந்து பார்வையிட்டு பெற்றுக்கொள்ளலாம் என பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி பா.இரகுநாதன் அறிவித்துள்ளார். (ச-19)

# பரிசில் தினம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய பரிசுத் தினம் இன்று காலை 9 மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் அதிபர் சா.தியாகலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்து கொள்ளவுள்ளார். (அ-7)

# வர்ணப் பூச்சுக்களால் ஆண்களுக்கு ஆபத்து

(லண்டன்)

வர்ணப்பூச்சுக்களிலுள்ள இரசாயனங்களானது ஆண்களின் இனப்பெருக்க ஆற்றலைப் பாதிப்பதாக பிரித்தானிய விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

வர்ணப்பூச்சுப் பூசுதல், அலங்காரப்பணிகள் என்பவற்றில் ஈடுபட்டுள்ள ஆண்களில், வழமையான விந்தணுக்களின் உற்பத்தி அளவுடன் ஒப்பிடுகையில் இரண்டரை மடங்கு குறைவான விந்தணுக்களே உற்பத்தியாவது இந்த ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

2ஆயிரத்துக்கும் அதிகமான ஆண்களில் இது தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி வர்ணப்பூச்சுக்களை கையாளும் தொழில்களில் ஈடுபட்டுள்ள ஆண்களுக்கு அவ் வர்ணப்பூச்சிலுள்ள இரசாயனங்கள் காரணமாக தந்தையாகும் சாத்தியப்பாடு பெருமளவு குறைவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

அத்துடன் புகைத்தல், இறுக்கமான உள்ளாடை அணிதல், பிறப்புறுப்புக்களிலான சத்திரசிகிச்சை மற்றும் உடற்பயிற்சி அற்ற வேலை என்பனவும் ஆண்களின் இனப்பெருக்க ஆற்றலை பாதிப்பதாக இவ் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த ஆய்வானது பிரித்தானியாவிலுள்ள மான்செஸ்டர் பல்கலைக்கழகம் மற்றும் ஷெபீல்ட் பல்கலைக்கழகம் என்பவற்றால் கூட்டிணைந்து முன்னெடுக்கப்பட்டது. (அ-5)

# இஸ்ரேலிடம் 150 அணுகுண்டுகள் இருப்பதாக அமெரிக்க முன்னாள் ஜனாதிபதிகாட்டர் தகவல்

(லண்டன்)

இஸ்ரேலிடம் 150 அணுகுண்டுகள் இருக்கின்றன என்று அமெரிக்க முன்னால் ஜனாதிபதி ஜிம்மி காட்டர் தெரிவித்தார். இஸ்ரேலிடம் அணுகுண்டுகள் இருப்பதாக ஒரு அமெரிக்க ஜனாதிபதி வெளிப்படையாக அறிவித்து இருப்பது இதுதான் முதல் முறையாகும். அமெரிக்காவின் நட்பு நாடான இஸ்ரேலிடம் அணு ஆயுதங்கள் இருக்கும் என்று நம்பப்பட்டு வந்தது.

ஆனால் இஸ்ரேல் அதிகாரிகள் அணுகுண்டு இருப்பதாக ஒப்புக்கொண்டது கிடையாது அமெரிக்க அதிகாரிகளும் இதை வெளிப் படுத்தியது கிடையாது. முதல் முறையாக இப்போது தான் அது வெளிப்படையாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதை அமெரிக்க முன்னால் ஜனாதிபதி ஜிம்மி காட்டரே தன் வாயால் அதை அறிவித்து இருக்கிறார்.

ஜிம்மி காட்டர் 1977ஆம் ஆண்டு முதல் 1981 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதியாக இருந்தார். அவரது பதவிக் காலத்தில் இஸ்ரேல் எகிப்து இடையே அமைதி ஒப்பந்தம் ஏற்பட காட்டர் உதவியாக இருந்தார். அவர் லண்டனில் ஒரு விழாவில் பேசும்போது , அமெரிக்காவிடம் 12 ஆயிரம் அணு ஆயுதங்கள் உள்ளன. ரஷ்யாவிடமும் அதே அளவு அணு ஆயுதங்கள் உள்ளன.

இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளிடம் பலநூறு அணு ஆயுதங்கள் உள்ளன. இஸ்ரேலிடம் 150 அணு ஆயுதங்கள் உள்ளன என்று தெரிவித்தார்.

எனவே ஈரான் நாட்டுடன் அமெரிக்கா நேரடியாக பேச்சு வார்த்தை நடத்தி, அணு ஆயுதத் திடத்தை கை விடச் செய்ய வேண்டும் என்று காட்டர் வலியுறுத்தினார்.

### காட்டரின் கூற்றுக்கு இஸ்ரேல் கண்டனம்

இஸ்ரேலிடம் அணுஆயுதம் இருப்பதாக காட்டர் தெரிவித்து இருப்பதற்கு இஸ்ரேல் அதிகாரி கண்டனம் தெரிவித்து இருக்கிறார். இது நல்லது செய்வதற்கு பதிலாக தீமை தான் செய்யும் என்று அவர் கூறினார். காட்டர் கடந்த ஏப்பிரல் மாதம் மத்திய கிழக்கு நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து வந்தார். அப்போது அவர் சிரியாவில் ஹமாஸ் தீவிர வாதக் குழு தலைவரை சந்தித்து பேசினர். காட்டர் இஸ்ரேலின் பாலஸ்தீன கொள் கையை கடுமையாக விமர்சித்து வருகிறார்.

இதனால் காட்டர் இஸ்ரேல் சென்றபோது , அவரை இஸ்ரேல் பிரதமர் எகுட் ஓல்மர்ட் சந்திக்க மறுத்துவிட்டார். (அ-5)

## ரெடி, தூக்கு ஓடு!



(பீட்டர்ஸ்பெர்க்)

ரஷ்யாவின் சென்பீட்டர் பெர்க் நகரில் தான் இப்படி எல்லோரும் பார்க்கும் போது மனைவியை தூக்கிக்கொண்டு ஓடுகிறார் ஒருவர்.

இருவர் கீழே விழுந்து கிடக்கின்றனர். இது தீ விபத்தினாலோ வழிப்பறிக்கொள்ளைக்கு பயந்தோ பிடித்த ஓட்டம் அல்ல .

மனைவியை தூக்கிய படி ஓடும் பந்தயத்தில் தான் கணவன் மார்கள் தங்கள் பலத்தை காட்டுகின்றனர்.

ஒரு ஜோடி தடுமாறி கீழே விழுந்ததைப் பற்றிக்கூட கவலையின்றி எப்படியும் பரிசை தட்டிச் சென்றுவிட வேண்டும் என்ற ஒரே குறியுடன் மனைவியை சுமந்து ஓடுகிறார் ஒரு கணவர். (அ-5)

# விமானத்தைச் சுட்டு வீழ்த்திய ரஷ்யா மன்னிப்பு கேட்கவேண்டும்

### ஜோர்ஜிய கோரிக்கை

(டிபிளிசி)

ரஷ்யாவில் இருந்து பிரிந்த நாடு தான் ஜோர்ஜியா. இதன் ஆள்இல்லா உளவு விமானத்தை ரஷ்ய விமானப்படை சுட்டுத்தள்ளியது. இந்த சம்பவம் கடந்த மாதம் நடந்தது. இதற்கு ரஷ்யா மன்னிப்பு கேட்க வேண்டும் என்று ஜோர்ஜியா கோரியுள்ளது. அதோடு இழப்பீடும் தர வேண்டும் என்றும் அந்த நாடு கோரி உள்ளது. இதை ஜோர்ஜியாவின் வெளி நாட்டு மந்திரிகிரி கோல் வாஷாட்ஸ் நிருபர்களிடம் தெரிவித்தார்.

ஜோர்ஜியா அமெரிக்கா ஆதரவு நாடாக இருப்பது ரஷ்யாவுக்கு பிடிக்கவில்லை. உளவு விமானத்தை சுட்டு வீழ்த்தியதில் எங்களுக்கு தொடர்பு கிடையாது என்று ரஷ்யா கூறியுள்ளது. (அ-5)

## உலக தரிசனம்

# திருமண பந்தத்தில் "அமுதவிழா" கொண்டாடிய பிரித்தானிய தம்பதி

(லண்டன்)

தமது 80ஆவது திருமண ஆண்டு விழாவைக் கொண்டாடி பிரித்தானியாவிலேயே அதிக காலம் திருமண வாழ்வில் இணைந்திருந்த தம்பதி என்ற பெருமையை பிலிமவுத் என்னும் இடத்தைச் சேர்ந்த பிராங்கும் அவரது மனைவி அனிடா மில்போர்ட்டும் பெற்றுள்ளனர்.

இவர்கள் இருவரும் 1928 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதி திரு மணபந்தத்தில் நுழைந்தனர். 100 வயதான பிராங்கிற்கும் எதிர்வரும் ஜீன் மாதம் 100ஆவது பிறந்த நாளைக் கொண்டாடவுள்ள அனிடாவுக்கும் 73 வயதில் மகன் ஒருவர் உட்பட இரு பிள்ளைகளும் 4 பேரப்பிள்ளைகளும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

படுக்கை செல்லும் போது ஒரு போது தீய எண்ணங்களுக்கு இடம் கொடுக்காமையே தமது நீண்ட திருமண வாழ்வின் இரகசியம் என தனது பெற்றோர் தெரிவித்ததாக அவர்களின் மகன் கூறினார். (அ-5)



# மன்னர் சுயமாக வெளியேறாவிட்டால் பலவந்தமாக வெளியேற்றப்படலாம்

## நேபாள அரசாங்கம் எச்சரிக்கை

நேபாளத்தின் 230 வருட கால மன்னராட்சி முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ள நிலையில் மன்னர் கஜேந்திரா அரச மாளிகையைவிட்டு சுயமாக வெளியேற மறுப்பாராயின் பலவந்தமாக வெளியேற்றப்பட நேரிடும் என அந்நாட்டு அரசாங்கம் நேற்று செவ்வாய்க்கிழமை எச்சரித்துள்ளது.



மன்னராட்சிக்கு முடிபு கட்டுவதானது ஒரு தசாப்தகால உள்நாட்டுப் போரை முடி புக்கு கொண்டுவரும் வகையில் முன்னாள் போராளிகளான மாவோயிஸ்ட்களுடன் 2006ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சமாதான உடன்படிக்கையின் முக்கிய அங்கமாக அமைந்துள்ளது.

மன்னர் தனது அரண்மனையிலிருந்து உடனடியாக வெளியேறி தனது தனிப்பட்ட இல்லமான நிர்மல் நிவாஸிற்கு செல்ல வேண்டும் என மீள் நிர்மாண அமைச்சர் ராம்சந்திர போடெல் தெரிவித்தார்.

அவர் தனது மாளிகையை விட்டு வெளியேறத் தவறின் அரசாங்கம் பலவந்தமாக அவரை வெளியேற்ற நேரிடும் என அவர் கூறினார்.

பாராளுமன்ற வாக்கெடுப்பிற்கு பின் மன்னர் அமைதியாக மாளிகையிலிருந்து வெளியேற வேண்டும் என நேபாள மக்களில் பலர் எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் மன்னர் கஜேந்திரா இது தொடர்பில் பகிரங்க அறிக்கை எதனையும் இது வரை வெளியிட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-5)

# ஆர்டிக் பனிப்பாறையில் பாரிய சிதைவு கனேடிய விஞ்ஞானிகளால் கண்டுபிடிப்பு

ஆர்டிக் பனி மலையில் அண்மையில் பாரிய சிதைவொன்று நிகழ்திருப்பதற்கான சான்றுகளை கனேடிய விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

கனடாவின் வடக்கு பகுதியிலுள்ள பாரிய பனிப்பாறைகள் தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்ள , அந் நாட்டு படையினருடன் இணைந்து பயணத்தை மேற்கொண்ட விஞ்ஞானிகளே இந்த உண்மையைக் கண்டறிந்துள்ளனர்.

ஆர்டிக் பிராந்தியத்திலுள்ள பாரிய பனிப்பாறையான 'வார்ட் ஹன்ட்' இலுள்ள சுமார் 16 கிலோமீற்றர் பகுதி சிதைவடைந்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

இச் சிதைவானது கால நிலை மாற்றத்தின் முக்கிய குறிகாட்டியாக உள்ளதென ரென்ட் பல்கலைக்கழக விஞ்ஞானிகளில் ஒருவரான தெரெக் முயலர் தெரிவித்தார்.



கடந்த வருடம் மதிப்பீடு செய்ததை விட மேற்படி பனிப்பாறையில் 23 சத வீத இழப்பு இடம் பெற்றுள்ளதாக அவர் கூறினார். (அ-5)

# நிலநடுக்கத்தில் புதையுண்ட இடங்களில் அணுக்கதிர் வீச்சு அபாயம்

(ஷெங்கிடு)

சீனாவில், பூகம்பத்தால் நாசமான சிசூவான் மாகாணத்தில் மரண ஓலம் இன்னும் ஓயவில்லை, அணு ஆயுத ஆராய்ச்சிகள், இரசாயன ஆயுதங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அடங்கிய இந்த பகுதியில் 50 இடங்களில் இருந்து அணுக்கதிர் வீச்சு அபாயம் ஏற்பட்டுள்ளது. சிசூவான் மாகாணத்தில் தான். சீனாவின் இராணுவ ஆராய்ச்சி மையங்கள் உள்ளன.

அணு ஆயுதங்கள் தயாரிக்கும் நிலையங்கள், அணு ஆயுத ஆராச்சி மையங்கள், சோதனை களங்கள் , அதற்கு தேவையான இரசாயன ஆராச்சிக் கூடங்கள் ஆகியவை இங்கு தான் உள்ளன. இந்த மாகாணத்தில் தான் பூகம்ப தாக்குதல் மிக மோசமாக இருந்தது. பல ஆயிரம் பேர் இறந்தனர். பல லட்சம் பேர் வீடிழந்து தவிக்கின்றனர். இதுவரை 50 சதவீத மீட்புப் பணிகள் முடிந்துள்ளன. இன்னும் பல இடங்களுக்கு மீட்புப்படையினர் போகவே முடியவில்லை.

அணு ஆயுதங்கள் தயாரிக்கும் கட்டடங்கள் பெரும்பாலும் நொருங்கி புதையுண்டுள்ளன. அவற்றில் தான் அபாயகர அணு ஆயுதங்கள் தயாரிப்பு தொடர்பான ஆய்வுகள் நடாத்தப்பட்டு வந்தன .அவற்றில் இருந்து இப்போது அணுக்கதிர்வீச்சு அபாயம் அதிகமாக உள்ளது. இது குறித்து விஞ்ஞானிகள் கூறுகையில். அணுக்கதிர்வீச்சு அபாயம் உள்ள இடங்களாக கருதப்பட்டாலும், பாதுகாப்பு முன்னெச்சரிக்கை எடுக்கப்பட்டு வந்தால் மக்களுக்கு அணுக்கதிர்வீச்சு ஆபத்து இருக்காது.

கண்டுபிடிக்கப்பட்ட 35 இடங்களில் மீட்புப்பணிகள் முழு அளவில் நடந்து வருகின்றன. இன்னும் 15 இடங்களில்உள்ள அணுக்கதிர் வீச்சு தொடர்பான தகவல் இல்லை. அந்த இடங்களை நாங்கள் தேடிக் கொண்டிருக்கிறோம். இடிபாடுகளில் அந்த பகுதிகளை அடையாளம் காண முடியவில்லை என்று சில விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

சிசூவான் மாகாணத்தில் அடியோடு அழிந்து நாசமான நகரம் பெய்சுவான். இந்த நகரத்தில் பாதி பேர் இறந்து விட்டனர். எல்லா இடங்களும் தரைமட்டமாகி, இடிபாடுகளாக காட்சியளிக்கின்றன. இந்த நகரத்தை பூகம்ப நினைவிடமாக பாதுகாக்க சீன அரசு முடிவு செய்துள்ளது. (அ-5)

# மூன்று கோடி அமெரிக்கர்கள் உணவுக்காக அரசின் உதவியை நம்பியுள்ளனர்-யு.எஸ்.ஏ.டுடே

(வோஷிங்டன்)

வேலையில்லா திண்டாட்டமும் , விலைவாசி உயர்வும் அதிகரித்துள்ளதால் , அமெரிக்காவில் 2.8கோடி பேர் உண்வுக்காக அரசின் உதவியை நம்பியுள்ளனர். இது தொடர்பாக யு.எஸ்.ஏ. டுடே பத்திரிகையில் கூறப்பட்டுள்ளதாவது,

கடந்த 2006 முதல் அமெரிக்காவில் , உணவுப் பொருட்கள் விலையும் , எரி பொருள் விலையும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அத்துடன் வேலையில்லா திண்டாட்டம் மற்றும் ஒரே விதமான சம்பளம் வழங்கப்படுவதாலும், உணவுக்காக அரசின் உதவியை எதிர்பார்ப்போர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 2.8 கோடி பேர் அரசின் உதவியை நம்பியுள்ளனர். அதாவது 11 அமெரிக்கர்களில் ஒருவருக்கு உதவி தேவைப்படுகிறது.

அமெரிக்காவில் குறைந்த வருவாய் உடைய குடும்பங்களுக்கு, சலுகை விலையும் உணவு மற்றும் சில்லறைச் சாமான்கள் வாங்க ஏரிஎம் கார்ட் வடிவிலான உணவு முத்திரை வழங்கப்படும். பத்தாண்டுகளுக்கு முன். இந்த உணவுமுத்திரை பெற்றவர்கள் எண்ணிக்கை 30 சதவீதமாக இருந்தது. இந்த எண்ணிக்கை தற்போது 41சதவீதமாக அதிகரித்துள்ளது. தொடர்ந்து அதிகரித்தும் வருகிறது. இவ்வாறு பத்திரிகை செய்தியில் கூறப்பட்டுள்ளது. (அ-5)

# மின்கட்டணம், புகையிரதக் கட்டணம் எரிவாயுவிலை விரைவில் அதிகரிக்கும்

## ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை



எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப் பட்டிருப்பதால் மின்சாரக்கட்டணம், புகையிரதக் கட்டணம்,எரிவாயுவின் விலைகள் போன்றன அதிகரிக்கப்பட்டிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எரிபொருட்களுக்கான வரியை 24 வீதமாக அதிகரித்திருப்பதால் மின்சாரக் கட்டணம் 45 வீதத்தாலும், ரயில் கட்டணம் மேலும் 50 வீதத்தாலும், எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை 125 ரூபாவாலும் விரைவில் அதிகரிக்கப்படும் என நேற்று புதன்கிழமை.கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் கூறினார்.

இந்த வரி அதிகரிப்பின் பின்னர் ஒரு லீற்றர் பெற்றோலை விற்பனை செய்வதன் மூலம் அரசாங்கத்துக்கு 68 ரூபாய் இலாபம் கிடைக்கிறது. இந்த இலாபத்தைக் குறைத்து பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத விலையில் எரிபொருட்களின் விலைகளைக் குறைத்துக் கொடுக்க அரசாங்கத்தால் முடியுமாக உள்ள போதும் அதனை அரசாங்கம் செய்வதில்லையென ரவி கருணாநாயக்க குற்றஞ்சாட்டினார்.

லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் எரிபொருட்களின் விலைகளை அதிகரிக்க அரசாங்கம் அனுமதித்து விட்டு ஒரு வாரத்தின் பின்னர் இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் எரிபொருட்களின் விலையையும் அரசாங்கம் கூட்டியுள்ளது. நேற்று முன்தினம் முதல் ஐ.ஓ.சி. நிறுவனம் ஒரு லீற்றர் டீசலின் விலையை அதிகரித்துள்ளது. சில தினங்களின் பின்னர் அரசாங்கமும் டீசலின் விலையை மேலும் 10 ரூபாவால் அதிகரிக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

ஈரான் ஜனாதிபதி இலங்கை விஜயம் மேற்கொண்ட பின்னர் நாட்டுக்குப் பெருமளவு எரிபொருட்கள் கிடைக்கப்பெறும் எனக் கூறப்பட்டது.எனினும் இதுவரை அவ்வாறான எந்த உதவியும் கிடைக்கவில்லை. சபுகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மேலும் விஸ்தீரணப்படுத்தும் நடவடிக்கை ஈரானின் உதவியுடன் மேற்கொள்ளப்படுமெனக் கூறப்பட்டது.ஆயினும் அதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாறாக தனியார் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது என ரவி கருணாநாயக்க ஊடகவியலாளர் மாநாட்டில் குற்றஞ்சாட்டினார்.

மிஹின் எயார் விமான சேவை ஆரம்பிக்கப்பட்ட நாள்முதல் அரசாங்கத்துக்கு 3,200 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. மிஹின் எயார் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு 898 மில்லியன் ரூபா செலுத்த வேண்டியுள்ளது. விமானங்கள் எதுவுமில்லாமல் செயற்பட்டு வரும் ஒரே ஒரு விமானசேவை மிஹின் எயார் விமான சேவையே எனக் குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினர் மிஹின் எயார் மூலம் பொது மக்களுக்கு பல நன் மை கள் கிடைக்கும் என மக்கள் நம்பியிருந்தபோதும் சிறந்த திட்டமிடல் இல்லாமையால் அதனை மூடவேண்டி ஏற்பட்டிருப்பதாகக் கூறினார்.

அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் முதலீட்டு ஊக்குவிப்புச் சபையால் அமைக்கப்பட்ட 781 கைத் தொழில் நிறுவனங்களில் தற்பொழுது 125 மூடப்பட்டு விட்டதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நேற்றைய ஊடகவியலாளர் மாநாட்டில் மேலும் தெரிவித்தார். (அ-5)

## விவசாயக் கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்கான போட்டிப் பரீட்சை

இலங்கை விவசாயக் கல்லூரிகளில் 2009/2011 ஆம் ஆண்டிற்கான இரண்டு வருட டிப்ளோமா கற்கைநெறிக்கு அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சை பரீட்சைத் திணைக்களத்தால் சிங்களம் / தமிழ் ஆகிய மொழிகள் மூலம் ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி யாழ்ப்பாணம் உட்பட நாட்டில் 13 நிலையங்களில் நடாத்தப்படவுள்ளது.

விண்ணப்பங்கள் யூன் மாதம் 30 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக ''பணிப்பாளர் , விரிவாக்க, பயிற்சிப் பிரிவு,விவசாயத் திணைக்களம், பேராதனை'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு மே மாதம் 30 ஆம் திகதிய வர்த்தமானியிலோ,வலம்புரிக் காரியாலயத்திலோ பார்வையிடலாம். (ஓ)

# குடாநாட்டில் அரசதுறை சார்ந்த வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

குறுகிய காலத்திற்குள் யாழ்.குடாநாட்டில் காணப்படுகின்ற அரசதுறை சார்ந்த வெற்றிடங்கள் நிரப்பப்படுமென சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வடமாகாணத்திற்கான விசேட செயற்பாட்டுக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வேலை வாய்ப்புக்கள் கோரி தினமும் அதிகளவிலான மக்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்திப்பதற்காக அவரது யாழ்.அலுவலகம் நோக்கி வருகை தருகின்றனர்: இவர்களில் ஒரு சாரார் ஏற்கனவே தங்களது பெயர்களைப் பதிவு செய்துள்ளனர். அத்துடன் கடிதங்கள் மூலமாகவும் விண்ணப்பங்களை முன்வைத்து வருகின்றனர்.

இந்த நிலையில் இவர்களுக்கான தொழில் வாய்ப்புக்களை வழங்குவது குறித்து நேற்று பொதுமக்கள் சந்திப்பின்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பொதுவாக வடமாகாணத்தில் தற்போது நிலவிவருகின்ற அரசதுறை சார்ந்த வெற்றிடங்கள் யாவும் வெகு விரைவில் நிரப்பப்படும் என்றும் தான் தற்போது யாழ். குடாநாட்டில் தங்கி இருப்பதால் தனது நேரடி கண்காணிப்பின் கீழ் குடாநாட்டில் நிலவுகின்ற அரசதுறை சார்ந்த வெற்றிடங்களை குறுகிய காலகட்டத்திற்குள் நிரப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

குடாநாட்டு மக்களது வேலைவாய்ப்புக்கள் தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர், ஏற்கனவே பதிவு செய்துள்ளவர்களுக்கான அரசதுறை சார்ந்த நியமனங்கள் வெகுவிரைவில் வழங்கப்படும் என்றும், புதிதாகத் தங்களது பெயர்களைப் பதிவு செய்தவர்களுக்கான நியமனங்கள் காலக்கிரமத்தில் வழங்கப்படும் என்றும் தெரிவித்ததுடன் ஏற்கனவே அரசதுறை சார்ந்த பதவிகளுக்கு விண்ணப்பித்துள்ளவர்கள் நேர்முகப் பரீட்சைக்குச் செல்லும்போது தன்னுடன் தொடர்பு கொள்ளும்படியும் அமைச்சர் தெரிவித்துள்ளார். தொலைபேசி இலக்கம்:- 021 222 9824. (அ)

# பரீட்சைப் பெறுபேறுகளை துரிதமாக வெளியிட நவீன கணனி உபகரணங்கள் கொள்வனவு

## பரீட்சை ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

பரீட்சை முடிவுகளைத் துரிதமாக வெளியிடும் நோக்கில் கல்வி அமைச்சின் உதவியுடன் 55 மில்லியன் ரூபா பெறுமதியான நவீன கணனி உபகரணங்களை பரீட்சைகள் திணைக்களம் கொள்வனவு செய்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் குறிப்பிடுகையில்,.பரீட்சைத் திணைக்களம் 12 வருட காலம் பழமை வாய்ந்த தொழில்நுட்ப கருவிகளையே பரீட்சை மதிப்பீட்டுப் பணிக்காக பயன்படுத்தி வருகிறது.

பரீட்சை முடிவுகள் தாமதமாக வெளியாவதற்கு இதுவும் ஒரு காரணமாகும். இந் நிலையை மாற்றியமைக்கும் நோக்கிலேயே புதிய கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை 2008 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இவ் வருடம் நடைபெறவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு பாடசாலை மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளிடமிருந்து கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் தற்போது பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

விரைவில் பரீட்சார்த்திகளுக்குரிய சுட்டிலக்கங்கள், பரீட்சை மண்டபங்கள் மற்றும் பரீட்சை மேற்பார்வையாளர்கள் போன்ற விபரங்கள் தயாராகி விடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-5)

# யாழ்.மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தென்னிலங்கைக்குத் தெரியப்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளைத் தெற்கு மக்கள் மற்றும் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சமாதானம் மற்றும் நிலையான அபிவிருத்திக்குமான மக்கள் கலந்துரையாடல் வலையமைப்பு இந்தப் பணிகளை முன்னெடுத்துள்ளது.

இந்த அமைப்பினர் கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து விவசாய மீனவ தொழிலாளர் மற்றும் இடம்பெயர்ந்தவர்களைச் சந்தித்துள்ளனர்.

இந்த நிலையில் யாழ்ப்பாண மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளைத் தெற்கில் உள்ள மக்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகச் சமாதானம் மற்றும் நிலையான அபிவிருத்திக்குமான மக்கள் கலந்துரையாடல் வலையமைப்புத் தெரிவித்துள்ளது. (அ-5)

# தீவகப் பிரதேசத்தில் நற்பண்புச் செயலமர்வு

தீவக பிரதேசத்தில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் புண்ணிய கிராம ஒருநாள் நற்பண்புச் செயலமர்வு ஊர்காவற்றுறை நாரந்தனை தான்தோன்றி அம்மன் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை இந்து கலாசார அபிவிருத்தி உதவியாளர் எஸ். உதயபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை, உதவி அரசாங்க அதிபர் கே. ஸ்ரீமோகனன், சிறப்பு விருந்தினர்களாக தம்பாட்டி அ.த.க. பாடசாலை அதிபர் கே.சுந்தரலிங்கம், நாரந்தனை கணேச வித்தியாலய அதிபர் எஸ்.பிறேமவல்லி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். அத்துடன் முற்பகல் 10 மணி தொடக்கம் 1 மணிவரை ''தியானப் பயிற்சி'' ''மனிதமேம்பாட்டு நடத்தைகள்'', ''ஆன்மீகமும் வாழ்வியலும்'' எனும் தலைப்புகளில் முறையே எ.தங்கமயில்,என். பி. ஸ்ரீந்திரன், கந்த.சத்தியதாசன் ஆகியோர் விரிவுரை நிகழ்த்தவுள்ளனர்.

பிற்பகல் 1.30 மணி தொடக்கம் 3.30 மணிவரை ''பெற்றோர் பிள்ளைகள் ஒருவரை ஒருவர் மனோதத்துவ அடிப்படையில் புரிந்து கொள்ளுதல்'', ''கலந்துரையாடல் மற்றும் அறிவுரைமூலம் குடும்பப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளல் வழிநடத்துதல்'' என்னும் தலைப்புகளில் முறையே வி.சிவராஜா மற்றும் என்.நவராஜ் ஆகியோர் விரிவுரை நிகழ்த்தவுள்ளனர். (ஓ)



நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலையின் (மங்கையர்கரசி வித்தியாலய) வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. அதிபர் ம.கஜேந்திரன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரம், நல்லை ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், சிறப்பு விருந்தினரான செங்குந்தா இந்துக் கல்லூரி அதிபர் இ.பாலகுமார், முதன்மை விருந்தினரான யாழ்.இந்துக்கல்லூரி அதிபர் வீ.கணேசராஜா ஆகியோர் பாடசாலைச் சமூகத்தினரால் அழைத்து வரப்படுவதைப் படத்தில் காணலாம்.

## … நடத்தும் … புலிகளுக்குள்ளது

## லண்டனை தளமாக கொண்ட…

(கொழும்பு) … விடுதலைப் புலிகள் … இழப்புகளுக்கு முகம் கொடுத்து வருகின்ற நிலையிலும் நாட்டின் எந்தப் பகுதியிலும் தாக்குதல் நடத்தும் இயலுமை … உள்ளனர் என … ஒன்றில் … தெரிவித்துள்ளது. … மோதல்களில் … புலி போராளிகள் கொல்லப்பட்டதாக அரசாங்க தரப்பு தெரிவிக்கின்றது.

மோதல் நடைபெறும் இப் பிரதேசத்தில் … தரவுகளை சுதந்திரமாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியாமல் உள்ளது.


இந்த … புலிகளால் நாட்டின் எந்தப் பகுதியிலும் பயங்கரவாதத் தாக்குதல்களை மேற் கொள்ளும் இயலுமை … (அ-5)

## ஜே.வி.பியின் 5ஆவது தேசிய மாநாட்டில் தமிழிலும் பேசிய … சோமவன்ச அமரசிங்க

… மொழியாக … தேசிய ஒற்றுமையை … இன்றைய அதி … தேவையாகவுள்ளது.

## … நாடுகளின் … அதுவராக சனத் ஜெயசூரியா

தடுப்பு பிரசார … வதற்கான நல்லெண்ணத்தூதுவராக இலங்கையின் கிரிக்கெட் முன்னணி துடுப்பாட்ட வீரர் சனத் ஜெயசூரிய தெரிவு செய்யப்பட்டுள்ளார். … மொன்றிலேயே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. … இரண்டு … கான இந்த கௌரவப் பதவியை … தடுப்பு … குறிப்பிட்ட … அனை… நாடுகள் … சந்திப்பதன் … நடவடிக்கை … அறிவிக்கப் … (அ-5)





## கொழும்பு … வின் வணிக … வெளியீடு

… கல்லூரியின் வணிக மன்றத்தின் … இன் வெளியீடு …

… புகைத்தல், மது …

இக்கொடி விற்பனையின் மூலம் … படுமிதி …

அன்றைய … தொழிக்க முடியும் என்று கூறினார்.

… அன்றாடும் … இலங்கையில் … தீர்ப்பதற்கு ஜரோப்பிய … ஜேர் … (Jurgen klimke) … அயர்லாந்து … சேர் (MartinMansergh) … அரசியல் … பிரச்சினைகளுக்கான அரசியல் தீர்வு …

துவா மூர்த்தியும் தமிழ் … எதிர்ப்பும் …

அயர்லாந்தின் அரசியல் … 10 வருடங்கள் … 20.21 … பேராசிரியர் … (Prof. … Hogan) … Alec …

… சிங்கள சமூகத்தில் இருந்து … பாள் மருத்துவ கலாநிதி என்.எஸ். மூர்த்தி …

போராளிகள் அமைப்பின் அரசியல் … சின்பெய்னின் Shin Fein உறுப்பினரும் 18 வருடங்கள் சிறையில் இருந்தவருமான றேமண்ட் மெகார்ட்னி (Raymondmc Cartney) ஆகியோரும் கருத்தரங்கில் பங்கேற்றனர். … இலங்கையின் மனித உரிமை மீறல்களைத் தட்டுப்படுத்தவும் அமைதி வழியில் …

… அயர்லாந்து ஒப்பந்தத்தை முன்மாதிரியாகக் கொண்டு இலங்கையில் எப்படி சமாதானத்தைக் கொண்டு வரலாம் என்பது தொடர்பாக அங்கு ஆராயப்பட்டது. அந்த நிகழ்வில் எனக்குப் பேசுவதற்கு தரப்பட்ட தலைப்பு போர்ச்சூழலில் நிறைந்த வடக்கு கிழக்கு மக்களின் வாழ்க்கை இந்த தலைப்பின் கீழ் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் மனிதாபிமானப்பணிகள் இந்தப் பிரதேசத்தில் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன என்பது தொடர்பில் எனது பேச்சில் எடுத்துக் கூறி …

… மாகக் குறிப்பிட வேண்டிய விடயம் என்ன … இந்நிகழ்வை ஆரம்பித்து வைத்தவர். அயர்லாந்து பேச்சுக்கு வித்திட்ட முக்கிய ஒருவர். … ராக இருந்தும் மருத்துவமனையில் இருந்து வந்து நிகழ்வில் கலந்து கொண்டு உரை …

இலங்கை இனப் பிரச்சினை தொடர்பாக …

இது குறித்து நாம் … ஜே.வி.பி. தலைவர் …

தலைமைப்பதவியில் தொடர்ந்தும் இருக்க … தயாராகவுள்ளேன்.

நல்ல காரியம் எனப்படும் தாய்க்கு குழந்தைகள் பிறக்காமல் போகாது
-இங்கர்சால்

வலம்புரி

# சிறிய பாடசாலைகளை பெரிய பாடசாலைகளுடன் இணைக்க வேண்டும்

சமகாலத்துக் கல்வியில் நிலவும் ஏற்றத்தாழ்வுகள் எதிர்காலத்தில் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பது மறுக்க முடியாத உண்மை.

இலங்கை பூராகவும் பாடசாலைகளுக்கிடையே ஏற்ற இறக்கங்கள் இருப்பினும், யாழ்ப்பாணத்தில் அந்நிலைமை மிக மோசமாக உள்ளதென்பது மறுக்கமுடியாத உண்மை.

யாழ்ப்பாணத்தில் பாடசாலைகளுக்கிடையே ஏற்ற இறக்கங்கள் அதிகரித்து வருகின்ற தென்பதற்கப்பால் அத்தகையதொரு சூழமைவு உருவாக்கப்படுகின்றதென்றே கூறவேண்டும்.

குறிப்பாக சில பாடசாலைகள் கல்வித்தரம், பிரபல்யம், பணவசதி என்பவற்றை வைத்துக் கொண்டு தமது நிலையை உயர்த்திச் செல்கின்றன.

இவ்வாறு அவை உயர்வு பெற்றுச்செல்வதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால் ஒருபகுதிப் பாடசாலைகள் வேகமாக வளர்ச்சியடைய மறுபகுதியில் உள்ள பாடசாலைகள் வீழ்ச்சியடைந்து செல்வது மிகவும் வேதனைக்குரியது மட்டுமன்றி அதனால் பிரபல்யமான பாடசாலைகளும் எதிர்காலத்தில் இயங்கமுடியாத நிலைக்கு தள்ளப்படும்.

இவ்வாறு கூறுவது சிலவேளை அதிர்ச்சியாகவும் அதிசயமாகவும் இருக்கலாம். ஆனால் இதுவே யதார்த்தம். ஒடுக்கப்பட்ட மக்கள் தொடர்ந்தும் ஒதுக்கப்படும்போது அவர்கள் கிளர்ந்தெழுவர், அத்தகையதோர் கிளர்ச்சி ஏற்படுமாக இருந்தால் அதனை கட்டுப்படுத்துவதும்,கவலை கொள்வதும் அர்த்தமற்றதாகவே இருக்கும்.

எனவே இத்தகையதோர் அவலமான சூழ்நிலை ஏற்படுவதை தடுப்பதில் கல்வியாளர்கள், புத்திஜீவிகள்,பாடசாலை அதிபர்கள் எனப் பல்துறை சார்ந்தவர்களும் சேர்ந்து இதற்கோர் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். உதாரணமாக, யாழ்ப்பாண நகரில் இருக்கக்கூடிய கொட்டடி நமசிவாயம் வித்தியாலயத்தை எடுத்துக் கொண்டால் இங்கு கல்வி கற்று 2007 ஆம் ஆண்டின் க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் எவருமே உயர்தரம் கற்பதற்கான தகுதியை பெறவில்லை.

இவ்வாறானதோர் பரிதாப நிலை யாழ்-நகரமையத்தில் இருக்கக் கூடிய பாடசாலைக்கு ஏன் ஏற்பட்டது. இந்த மாணவர்கள் என்ன பாவம் செய்தார்கள், இவர்கள் சபிக்கப்பட்டவர்களா? என்ற கேள்விகள் நம்மிடையே ஏற்பட்டு அதற்கான நிவாரணத்தைத் தேட வேண்டும்.

மாறாக இத்தகையதோர் கேள்வி பாதிக்கப்பட்ட கொட்டடி நமசிவாய வித்தியாலய மாணவர்களிடையே ஏற்படுமாக இருந்தால் அதன் விளைவு பாரதூரமானதாக அமையும் என்பது நினைவிற் கொள்ளத்தக்கது.

# முகாமையாளர்களின் கருத்தரங்கு அமைப்பு

பலதுறைகளிலும் சமுக மட்டத்தில் அறிவை விருத்தி செய்து படிப்படியாக சகலருக்கும் ஒரு அறிவு சார்ந்த புரிந்துணர்வை ஏற்படுத்தும் நோக்கத்தோடு 2004 ஆம் ஆண்டளவில் பல வங்கிகளின் முகாமையாளர்களும்,பொறியியலாளர்களும் மற்றும் வெவ்வேறுதுறை சார்ந்த கல்விமான்களும் இணைந்து மேற்படி அமைப்பை உருவாக்கினர் .

மாதந்தோறும் ஒவ்வொரு துறையிலும் நிபுணத்துவத்தைக் கொண்டவர்களை அழைத்து இலவசமான ஒரு கருத்தரங்கை இவ் அமைப்பு நடத்தி வருகிறது. இது வரை காலமும் இடம் பெற்ற கருத்தரங்குகளை நடத்துவதற்காக நல்லூர் யூரோவில் நிறுவனம் அதனது மண்டபத்தை கொடுத்துதவியுள்ளது வரவேற்கத்தக்கது.

இந்த நிறுவனத்தோடு வேறும் அனுசரணையாளர்களும் ஒவ்வொரு முறையும் பங்கேற்கின்றனர். இதுவரை பதினொரு கருத்தரங்குகள் நடைபெற்று கீழ் வரும் சில முக்கியமான விடயங்களைப் பற்றிய அறிவு துறை சார் நிபுணர்களால் அளிக்கப்பட்டது.

01. நிதிச் சந்தையும் முதலீட்டுச் சந்தையும்.
02. திட்ட முகாமைத்துவம்.
03. முகாமைத்துவ தகவல் தொடர்பு
04. மன இறுக்கம் ஏற்படாமல் தவிர்ப்பது எப்படி?
05. கம்பெனிகள் சட்டம்
06. நீர் வளங்களை எப்படி நிர்வகிப்பது.
07. இலத்திரனியல் வங்கிச் சேவை
08. மனித வள நிர்வாகம்
09. இயற்கை அழிவுகளும் அவற்றை எதிர் கொள்ளும் முறைகளும்
10. இயற்கையோடு இணைந்த விவசாயம்.
11. சுகாதாரமும் , சத்துணவும்

11ஆவதாக நடந்த சுகாதாரமும், சத்துணவும் என்பது இறுதியாக நடத்தப்பட்ட கருத்தரங்காகும். இது வைத்திய கலா நிதி சி.எஸ் ஜமுனானந்தவின் தலைமையில் நடைபெற்றது வைத்திய கலா நிதிகள் எஸ். கேதீஸ்வரன், என் ஜெயக்குமாரன் மற்றும் எஸ்.பிரேமகிருஷ்ணா ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர் சரியான உணவு முறைகள், புற்று நோய்க்கும் காசநோய்க்குமான காரணிகள் அவற்றை எவ்வாறு தடுப்பது போன்ற விடயங்களை தெளிவாகவும் ஆதார பூர்வமாகவும் இவர்கள் எடுத்துக்கூறினர்.

இந்நான்கு வைத்தியர்களும் அவரவர் துறையில் நிபுணத்துவம் பெற்றவர்கள் என்பது (Consultant Specialists) தெரிந்ததே .

## ஒரு பார்வை

துரதிஷ்டவசமாக குணப்படுத்த முடியாத நோய்கள் ஏற்பட்டு விட்டால் அந்நோயாளிகள் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் அமைதிப்படுத்தி ஒரு நிம் மதியான மனிதராக இச் சமுகத்தில் அவர்களை வாழ வைப்பது எப்படி என்பது பற்றியும்விரிவான விளக்கம் அளிக்கப்பட்டது. நிகழ்வின் இறுதியில் கலந்து கொண்டவர்கள் கேட்ட பல்வேறு தரப்பட்ட சந்தேகங்களுக்கும் விரிவானபதில்கள் அளிக்கப்பட்டன.

மேற்படி அமைப்பு ஒழுங்கு செய்யும் இப்படியான கருத்தரங்குகளில் மேலும் பலரும் கலந்து கொண்டு பயன் பெற வேண்டும் என்பதே ஒருங்கமைப்பாளர்களின் நோக்கம் அதை ஒரு சமுகத் தொண்டாகவே கருத இடமுண்டு.

✠ கருத்தரங்கை நடத்துபவர்கள் குறிப்பிட்ட துறையில் நிபுணத்துவமும் அறிவும் பெற்றவர்கள் அவர்கள் இதனை இலவ ச மாக நடத்தி உதவி புரிகின்றனர்.

✠ இக் கருத்தரங்கில் கலந்து கொள்பவர்கள் தாம் கிரகித்த விடயங்களை தமது சக ஊழியர்களுக்கும், சமுகத்திற்கும் எடுத்துச்செல்ல வேண்டும் .

✠ மக்களின் நலன் கருதி துறை சார்ந்த நிபுணத்துவம்வாய்ந்தவர்கள் தாமாகவே முன் வந்து கருத்தரங்குகளை நடத்த முன்வர வேண்டும்.

**குறிப்பு:-** யாழ் சமுகத்தின் நன்மை கருதியே இக் கருத்தரங்குகள் ஒவ் வொரு மாதமும் நடாத்தப்படுகின்றன.

**என்.சிவரட்ணம்**
வடபிராந்திய இலங்கை வங்கி,
செயற்பாட்டுமுகாமையாளர்.

கருத்தரங்கு நடைபெற ஒரு வாரம் முன்னதாக கருத்தரங்கில் இடம் பெறும் விடயம் பற்றியும் எங்கே நடைபெறும் என்பதைப் பற்றியும் சிறிய பத்திரிகைக் குறிப்புகள் வெளியிடப்படும் .

# மட்டக்களப்பு பிரதேச பிரச்சினைக்கு மூன்றாம் தரப்பொன்றே காரணம்

**முதலமைச்சர் பிள்ளையான் தெரிவிப்பு**

மட்டக்களப்பு மற்றும் காத்தான்குடி பகுதியில் ஏற்பட்ட பதற்றநிலமைகளுக்கு மூன்றாம் தரப்பு ஒன்றே காரணமாக இருக்கலாம் என கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையான் தெரிவித் துள்ளார். இந்த கருத்தை அவர் முஸ்லிம் பிரநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலங்களில் செங்கலடி மற்றும் காத்தான்குடி ஆகிய பிரதேசங்களில் ஏற்பட்ட வன்முறைகள் காரண மாக சுமார் 500 குடும்பங்கள் வரை இடம்பெயர்ந்துள்ளனர். இந்த நிலையில் தம்மி டம் ஆயுதங்கள் இல்லை. பிள்ளையான் குழுவினரிடமே ஆயுதங்கள் உள்ளன. எனவே அவர்களே இந்த மூன்றாம் தரப்பை கண்டு பிடிக்கவேண்டும் என ஏறாவூர் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, கடத்திச்செல்லபட் டுள்ள இரண்டு இளைஞர்களும் விடு விக்கப்பட்டால் மாத்திரமே ஏறாவூரில் நிலைமை சுமுக மாகும். இல்லையேல் நிலைமையை கட்டுக்குள் கொண்டு வரமுடியாது என முஸ்லிம் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். கிழக்கு மாகாண சபைத் தேர்தலின்போது முஸ்லிம்களுக்கு முதலமைச்சர் பதவியை தருவதாக கூறிய அரசாங்கம் பின்னர் தமிழர்களுக்கும் அதே உறுதிமொழியை வழங்கியது. இதுவே கிழக்கில் இப்போது ஏற்பட் டுள்ள பிரச்சினைக்கான காரணம் என முஸ்லிம் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டி யுள்ளனர். (அ-5)

# வடக்கு மாகாணத்தில் 99இல் நியமனம் பெற்ற பட்டதாரிகளுக்கு பதவி உயர்வு வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்தனவின் கையொப்பமிட்டு வழங்கப்பட்ட சேவைப்பிரமாண குறிப்பின் பிரகாரம் 17.06.1999 இல் நியமனம் பெற்ற பட்ட தாரிகளுக்கு பதவியுயர்வு வழங்கப்படும். இதற்கான நடவடிக்கையினை வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் 17.06.1999 இல் அபிவிருத்தி உதவியாளர்கள், மருத்துவ ஆவணக்காப்பு அலுவர்கள், நிகழ்ச்சி திட்டமிடல் அலுவலர்கள், பாடசாலை முகாமைத்துவ உதவியாளர்கள்(SMA) உள்ளூராட்சி உதவியாளர்கள் என நியமனம் செய்யப்பட்டனர்.

நியமனம் வழங்கப்பட்டு 09வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளது. எனவே 18.06.1999 இல் இருந்து அமுலுக்கு வரத்தக்கதாக வெளியிடப்பட்ட அரசாங்கத்தின் முன்னுரிமை செயற்பாடுகளை நடை முறைப்படுத்துகின்ற சேவைப்பிரமாண குறிப்பின் பிரகாரம் வகுப்பு மூன்றில் (III) 4வருட திருப்திகரமான சேவையினையும், முதலாவது வினைத்திறமை காண் தடைப் பரீட்சையிலும் சித்தியடைந்து பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட அலுவலர்கள் தரம் இரண்டிற்கு (II) விரைவில் பதவி உயர்த்தப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து வடக்கு மாகாண மேற்படி பட்டதாரி அலுவலர் தமது பதவி உயர்வு குறித்து திணைக்கள தலைவர் ஊடாக முதல் நியமனக் கடிதம். பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் முதலாவது வினைத் திறமைகாண் தடைப் பரீட்சை சான்றிதழ் பிரதி, வரலாற்றுத் தாள் ஆகியவற்றை இணைத்து திணைக்களத் தலைவரின் சிபாரிசுடன் அனுப்பி வைத்தால் பதவி உயர்வு (வகுப்புIII) வழங்கப்படும்.

இதேவேளை 17.06.99 இல் நியமனம் பெற்ற பட்டதாரி அரசாங்க அலுவலர்களுக்கு 2ஆவது வினைத் திறமை காண் தடைப் பரீட்சையும் நடாத்த வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(அ-7)

# காலத்தின் கட்டுப்பாட்டாளன் பகவான் பாபா



பல வருடங்களுக்கு முன்பு யோகி என்ற பக்தை பிரசாந்தி நிலையத்தில் வசித்து வந்தார். ஒருநாள் அப்பெண்மணி பகவானிடம், சுவாமி! குருஷேத்திரப் போரின் போது பாண்டவர் பக்கமும் கௌரவர்கள் பக்கமும் எத்தனையோ அக்கிறோனி சேனைகள் யுத் தத்திற்கு தயாராய் இருந்த போது எப்படி 700 சுலோகங்கள் அடங்கிய பகவத்கீதையை கிருஷ்ணன் கூற எதிரிகளைக் கவனியாது அருச்சுனன் அதனைச் செவி மடுக்க எவ்வளவு நேரம் எடுத்திருக்கும். அத்தோடு எதிரிகளும் சும்மா இருக்க வேண்டுமே... இது எவ்வாறு சாத்தியமாகும் என அப்பக்தை வினவினார். சுவாமி உடன் பதில் கூறவில்லை.

கொழும்பைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவ மாணவன்,உயர் படிப்பிற்காக சென்னைக்குச் சென்று கிறிஸ்தவ கல்லூரி ஒன்றில் படித்து வந்தான். ஒருநாள் இராமகிருஷ்ண மிஷ னுக்குச் சென்று பரமஹம்ஸர் வழிபட்ட காளி மாதாவை வழிபட்டான். தொடர்ந்து காளிமாதா வின் வழிபாட்டில் ஈடுபட்டான். நித்தமும் தேவி மந்திரத்தை தியானித்து வந்தான். சந்நியாசி நிலையை அடையப் பெற்றவனானான்.

ஒரு நாள் புட்பர்த்திச் சென்றான். சுவாமி அவரைச் சம்பாஷிக்கும் அறைக்குள் அழைத்தார். ஒரு மணி நேரம் கழித்த 'அம்மா' என்ற பெரும் சத்தம் கேட்டது. வெளியில் இருந்த அனைவரும் அதிசயித்தனர். சுவாமியின் அறைக்குள் இருந்து அச் சந்நியாசி உடல் முழுதும் திருநீறு படர்ந்தவராய் வெளியில் வந்தார்.

நடந்ததென்ன? சுவாமி பெரிய காட்டினை உருவாக்கி அதற்குள் காளி மாதாவை தேடும்படி அச் சந்நியாசிக்கு உத்தர விட்டார். அக்காட்டுக்குள் பல வருடங்களாக நடந்து திரிந்தார். இறுதியில் சுவாமி பின்புறம் திரும்பிப் பார் என்றார். திரும்பினான்;பார்த்தான்; திகைத்தான்; சிறுவயதில் இருந்து பக்தியுடன் வழிபட்டு வந்த அன்னை காளி அழகுடனும் ஒளியுடனும் அவன் முன் நின்றார். அப்போதே ஆனந்தப் பெருக்கத்தில் 'அம்மா' என்று குழறிவிட்டார்.

பகவான் யோகியை நோக்கி ஒருமணி நேரம், அத்தனை வருடங்களாக அச் சந்நியாசிக்கு கழிந்ததோ அதே மாதிரியே கிருஷ்ணன் அருச்சுனனுக்கு கீதையை உபதேசித்த காலமும் என்னால் காலத்தை நீட்டவும் முடியும். சுருக்கவும் முடியும் என்றார் பகவான் பாபா.

ஜெய்சாயிராம்

யாதவன்.

# ஓய்வு பெற்ற மேலதிக அரச அதிபர் வைத்திலிங்கம் காலமானார்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் ஓய்வு பெற்ற மேலதிக அரசாங்க அதிபரும் சிறந்த சிறுகதை எழுத்தாளருமான து.வைத்திலிங்கம் நேற்று கொழும்பில் காலமானார்.

இலங்கை நிர்வாக சேவையில் இணைந்த அவர், பல்வேறு இடங்களில் உதவி அரசாங்க அதிபராகவும் பிரதேச செயலாளராகவும் கடமையாற்றி யாழ்ப்பாணத்தில் மேலதிக அரசாங்க அதிபராக இருந்து ஓய்வு பெற்றார்.

எழுத்துத் துறையில் பிரகாசித்த அவர், நூற்றுக் கணக்கான சிறுகதைகளை பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் எழுதியதுடன் சிறுகதைத் தொகுதிகளையும் வெளியிட்டுள்ளார்.

யாழ்.குடாநாட்டின் மிக இக்கட்டான சூழ்நிலையில் யாழ்.மாவட்டத்தின் மேலதிக அரசாங்க அதிபராக இருந்து மக்களுக்கு பெரும் சேவையாற்றியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அவரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# பாதுகாப்புச் செயலரின் கருத்துக்கு ஊடக அமைப்புக்கள் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியதாக கூறப்படும் கருத்துக்களுக்கு இலங்கையின் ஊடக அமைப்புக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

வடக்கே இராணுவத்திற் கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடக்கும் மோதல்கள் குறித்து பக்கச்சார்பற்ற முறையில் செய்திகளை வெளியிடுவதற்குப் பாதுகாப்புச் செயலாளரின் பேச்சு அச்சுறுத்தலாகவுள்ளதாக ஊடக அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

பத்திரிகையாளர் கீத் நொயார் கடத்தப்பட்டு அடித்துத் துன்புறுத்தப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்த இரண்டு மூத்த பத்திரிகையாளர்களைக் கோத்தபாய ராஜபக்ஷ தன்னைக் காண வருமாறு பணித்ததாக ஐந்து ஊடகக் குழுமங்கள் ஒரு அறிக்கையில் கூறியுள்ளன.

அரசாங்க ஊடகத்தில் இராணுவம் மற்றும் இராணுவத் தலைவர்களின் செயற்பாடுகள் குறித்த விமர்சனங்கள் ஏற்புடையவையல்ல என்று பாதுகாப்பு ஆலோசகருடான இந்தச் சந்திப்பின்போது இவர்களுக்குக் கூறப்பட்டதாகவும் அவர்களின் உயிர் பாதுகாப்பு குறித்து இலை மறைகாயாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் ஊடகக் குழுமங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை கோத்தபாய ராஜபக்ஷ மேற்படி இருவரையும் மிரட்டவில்லை என்று தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஷ்மன் குலுகல்ல தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தை விமர்சிக்கும் உரிமை ஊடகவியலாளர்களுக்குக் கிடையாது. ஆனால் மேற்படி இருவரும் அரசை விமர்சித்து ஆர்ப்பாட்டங்களில் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

அது குறித்து ஆராயவே கோத்தபாய ராஜபக்ஷ அவர்களை அழைத்துப் பேச்சு நடத்தினார். அவர்களை மிரட்டவில்லை என்று லக்ஷ்மன் குலுகல்ல தெரிவித்துள்ளார். (ச-5)

# சமாதானத்தை வலியுறுத்தி கொழும்பில் பெண்கள் பேரணி

(கொழும்பு)

கொழும்பில் நேற்று நூற்றுக் கணக்கான பெண்கள் அமைதிப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர். நாட்டில் நடந்து வரும் கொடிய யுத்தத்தினை நிறுத்த வேண்டும். அரசும் தமிழீழ விடுதலைப்புலிகளும் சமாதானத்தை நிலை நிறுத்த புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும். அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த வேண்டும் போன்ற பல கோரிக்கைகளை முன்வைத்து சம்பந்தப்பட்ட தரப்பினர் மீது அழுத்தத்தினைப் பிரயோகிக்கும் நோக்கில் போராட்டம் நடத்தப்பட்டது.

கொழும்பு விகாரமகாதேவி பூங்காவிற்கு எதிரில் இடம்பெற்ற இந்த அமைதிப் பேரணியை சமூக நீதிக்கான பெண்கள் இயக்கம், சமாதானம் மற்றும் நிலையான அபிவிருத்திக்குமான மக்களுக்கிடையிலான கலந்துரையாடல் போன்ற அமைப்புக்கள் ஏற்பாடு செய்திருந்தன. (ச-5)

# 2 தமிழ் மீனவர்கள் மட்டு.வில் படுகொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சின்ன ஊரணியில் நேற்று அதிகாலை 2 தமிழ் மீனவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் பதற்றம் நிலவுகின்றது. ஊரணிக் கிராமத்தைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான இ.ஒப்பிலாமணி (வயது-38), அதேயிடத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கணபதி விவேகானந்தன் (வயது-30) ஆகிய இருவருமே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளதாகத் தெரியவரும்அதேவேளை, இச் சம்பவம் நேற்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்றிருக்கலாம் என மட்டக்களப்புப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ச-5)

## போரின் வெற்றியை தக்க...

கிழக்கில் இனக் கலவரத்திற்குக் காரணமான சக்திகளை விரைவில் அம்பலப்படுத்தப் போவதாக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது, 20 வருடங்களுக்குப் பின்னர் இரும்புக் கரங்களில் இருந்து கிழக்கு மாகாண மக்கள் மீட்கப்பட்டு அவர்களின் வாக்குரிமைக்கு அரசாங்கம் பலம் கொடுத்துள்ளது.

மாகாண சபைத் தேர்தலில் வென்று ஒருவர் முதலமைச்சர் பதவியையும் பெற்றுள்ளார். இன்று கிழக்கில் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. கிழக்கில் நிலவும் இத்தகையதொரு நிலையை புலிகளால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

இதனால் கிழக்கில் இனக் கலவரத்தைத் தூண்டும் வகையில் செயற்படுகின்றனர். இவர்களின் பின்னணியில் மாகாண சபைத் தேர்தலில் தோல்வி கண்ட அரசியல் சக்திகளும் உள்ளன.

அவர்கள் யார்? யார்? என்ற விபரத்தை விரைவில் வெளியிடுவோம். கிழக்கில் தற்போது நிலைமை வழமைக்குத் திரும்பியிருக்கின்றது. இனிமேல் கிழக்கில் இத்தகைய கலவரங்களை ஏற்படுத்த முடியாது.

13-வது அரசியல் அமைப்பு திருத்தச் சட்டத்தை உடனடியாக அமுல்படுத்தி கிழக்கின் பாதுகாப்பை உறுதிப்படுத்த இருக்கின்றோம். ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையில் எமக்கு தோல்வி ஏற்படவில்லை.

50 சதவீதமான வாக்குளை அதாவது 101 வாக்குகளைப் பெற்றிருக்கின்றோம். அடுத்த வருடம் மீண்டும் போட்டியிடுவோம். அதில் வெற்றியுமடைவோம்.

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களால்தான் ஐ.நாவில் இடம் கிடைக்கவில்லை என்று சொல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றார் அவர். (ச-5)

## 'சக்தி'...

சம்பவ இடத்திலிருந்து சற்றுத் தொலைவில் காணப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன், பிரேத பரிசோதனைக்காகச் சடலங்களை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு மானிப்பாய்ப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். சடலங்கள் யாழ்.போதனா வைத்திசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ச-5)

## என்னை அரசாங்கம் கைது...

லிருந்து பிளவடைந்து சென்ற விமல் வீரவன்சவுக்கு சொகுசு வீடு, வாகனங்கள் மற்றும் பாதுகாப்பு வசதிகளை ஜனாதிபதி ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என அவர் குறிப்பிட்டார்.

இதனால் ஜனாதிபதியின் வழியிலேயே விமல் தரப்பு பயணம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

பழைய சம்பவங்களைக் கிளறி தமக்கும் ரில்வின் சில்வாவுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க அரசாங்கம் சதித் திட்டம் தீட்டியுள்ளதாக சோமவன்ச அமரசிங்க இங்கு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் சேனாதிபதி என்ற ரீதியில் ஜனாதிபதிக்கு இவ்வாறான செயல்களில் ஈடுபட எவ்வித அதிகாரமும் இல்லை எனக் குறிப்பிட்டுள்ளார். (எ-5)

## மனித உரிமை மீறல்கள்...

என்பது தொடர்பாக இவர்கள் ஆராயவுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தை சேர்ந்த தூதுவர்களான நெதர்லாந்தைச் சேர்ந்த அர்ஜன் ஹம்போர்கர் , சுவீடனைச் சேர்ந்த ஜான் நோர்ட்லாண்டர் , ஸ்பெயினைச் சேர்ந்த சில்வியா எஸ்கோபா ஆகிய மூவர் கொண்ட குழுவே எதிர்வரும் ஜுன் மாதம் 17 ஆம் திகதி இலங்கை வரவுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த இந்தப் பிரதிநிதிகளின் இலங்கைப்பயணம், இலங்கையில் ஏற்பட்டுவரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் மிகக் கவனம் எடுத்து வருவதை காட்டுவதாக இராஜதந்திர வட்டாரங்கள தெரிவித்துள்ளன.

ஐ.நா.வின் மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசு தனது அங்கத்துவத்தை இழந்த பின்னர் மனித உரிமைகள் குழுவைச் சேர்ந்த உயர்மட்ட அதிகாரிகளின் முதல் பயணம் இதுவாகும். இது அரசின் ஜீ.பி.எஸ் பிளஸ் எனப்படும் வர்த்தக உடன்படிக்கையில் நேரடியான தொடர்பை கொண்டுள்ளது.

இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும் தூதுவர்கள் நாட்டின் மனித உரிமை கட்டமைப்புக்கள் , மனித உரிமை செயற்பாடுகள் தொடர்பான அரசின் நடவடிக்கைகள் . மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவோர் மீதான நடவடிக்கைகள், சிறார் படைச்சேர்ப்பு என்பன தொடர்பாக ஆராயவுள்ளனர். (ச-5)


## மரண அறிவித்தல்

### சபாரத்தினம் முத்தையாபிள்ளை

காரைநகர் வலந்தலை மடத்துக்கரையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் முத்தையா பிள்ளை 27.05.2008 செவ்வாய்க்கிழமை கொழும்பில் அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் சபாரத்தினம், சபாரத்தினம் வள்ளியம்மையின் சிரேஷ்ட புத்திரனாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 29.05.2008 இன்று வியாழக்கிழமை 51/83, ANDIVAL STREET, COLOMBO-13 இல் நடைபெறும்.

தகவல்,
மு.தவமணி (பவா)
(மனைவி),
ச.தருமகுலசிங்கம்
(சகோதரன்)

கூழாவடி ஒழுங்கை,
நாச்சியம்மன் கோவிலடி,
ஆனைக்கோட்டை.

(C-1168)



## தேவை

பிரபல கணனி நிறுவனத்திற்கு Ms Office, Graphic Designing, Programming போன்ற பாடங்களைக் கற்பிப்பதில் அனுபவம் உள்ளவர்கள் பகுதி நேரமாகவும் முழுநேரமாகவும் பணியாற்ற தேவைப்படுகின்றனர். ***07.06.2008ற்கு முன்னர் விண்ணப்பத்தை அனுப்பி வைக்கவும்.***

தொடர்புக்கு:- விளம்பர இல.C/1167
மே/பா வலம்புரி,
இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(C-1167)


## தேசிய அடையாள...

ரஞ்சித் குணசேகர பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தற்போது நிலவும் பாதுகாப்பு சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தேசிய அடையாள அட்டையைப் பாதுகாப்பாக வைத்திருக்குமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

## தொண்டர்...

(வயது-31) என தெரிவிக்கப்பட்டது. மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் அதில் படுகாயமடைந்த அவரை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் உயிரிழந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை யாழ்.நீதிவான் இ.த. விக்னராஜா மேற்கொண்டார். (ச-5)

## யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்...

என்ற சிறுவனே கடத்தப்பட்டுள்ளார்.

இவரது தாயார், ஆட்டோவில் இருப்பதாகக் கூறியே மேற்படி சிறுவனை கடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. சிறுவனின் தந்தை வெளிநாடு ஒன்றில் பணிபுரிகின்றார்.

இச் சம்பவம் குறித்துப் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. அமைச்சர்களிடமும் முறையிடப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பு கதிரேசன் வீதியில் இளைஞன் ஒருவர் வெள்ளை வான் குழுவினரால் கடந்த 26 ஆம் திகதி கடத்தப்பட்டுள்ளார்.

யாழப்பாணம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சிறிகாந்தன் சசிதரன் (வயது-30) என்ற இளைஞரே கடத்தப்பட்டவர் ஆவார். இவர் கல்கிசையில் தங்கியிருந்து சாரதியாகப் பணியாற்றி வருபவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு கதிரேசன் வீதியிலுள்ள தனியார் அலுவலகம் ஒன்றில் சாரதியாகக் கடந்த ஒன்றரை வருடங்களாகப் பணியாற்றி வந்த இவர், கனடா செல்வதற்காகக் கொழும்புக்கு வருகை தந்திருந்தார் என்று இவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் சீருடையிலும் பொது உடையிலும் வெள்ளை நிற வானில் வந்தவர்களே சசிதரனின் அடையாள அட்டையைப் பரிசோதித்துவிட்டு அவரைப் பலவந்தமாக வானுக்குள் இழுத்து ஏற்றிச் சென்றனர் என்று அவர் சாரதியாகப் பணிபுரிந்த நிறுவனத்தின் உரிமையாளர் பொலிஸாரிடமும் பிரதி அமைச்சர் பெ.இராதாகிருஷ்ணனிடமும் முறையிட்டுள்ளார். (எ-5)

## மானிப்பாயில்...

11.05 மணிக்கு ஆட்டோவில் சென்ற ஆயுததாரிகள் சிலர் பிறேமலோ ஜினியின் சகோதரன் எங்கே என்று விசாரித்துள்ளனர்.

அவர் வீட்டில் இல்லை என்று பெற்றோர் கூறியதையடுத்து வீட்டுக்குள் அத்துமீறிப் பிரவேசித்த ஆயுததாரிகள் பிறேமலோஜினியை வலுக்கட்டாயமாக இழுத்துச் சென்றுள்ளனர்.

இதுவரை அவர் எங்கு கொண்டு செல்லப்பட்டார் என்ற விபரம் தெரியவில்லை என்று அவரது பெற்றோர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர். (எ-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.05.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.